Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 134 | வெள்ளிக்கிழமை | பங்குனி 27 ஆம் நாள் 09 ஏப்ரல் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20
விலை : ரூ.30
செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

## அரசியல் கைதியின் தாய்க்கு தொலைபேசியில் மிரட்டல்!

*பொலிஸில் முறைப்பாடு*

யாழ்ப்பாணம், ஏப்.9

இனந்தெரியாதவர்களால் தொலைபேசி மூலம் தொடர்ச்சியாக அச்சு 19

# நேற்று மட்டும் யாழில் 136 பேருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9

வடக்கில் நேற்று 137 பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 136 பேர் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவர் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார். யாழ்ப்பாணம் நகர வர்த்தகர்கள், அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் மற்றும் திருநெல்வேலி பாற்பண்ணையைச் சேர்ந்தவர்கள் ஆகியோரின் மாதிரிகள் பி.சி.ஆர். சோதனைக்காக ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக ஆய்வுகூடத்துக்கு அனுப்பப்பட்டிருந்தன. 19

## பி.சி.ஆர். செய்யாத 200 பேருக்குத் தடை

யாழ்ப்பாணம், ஏப்.9

இரண்டாம் கட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளாது வர்த்தக நிலையங்களைத் திறக்க முயன்ற சுமார் 200 வர்த்தகர்கள் நேற்றுத் திரும்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். 19

## டென்மார்க் வைரஸுடன் மூவர் கொழும்பில்

கொழும்பு, ஏப்.9

டென்மார்க்கில் பரவும் புதிய வகை திரிபடைந்த கொரோனா வைரஸ் தொற்றுடன் கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் மூவர் இனங்காணப்பட்டுள்ளனர். ஸ்ரீ ஜெயவர்த்தனபுர 19

முச்சந்தி முரளி



"அவை என்னவும் செய்தால் சுத்தம், நாங்கள் செய்தால் குற்றம். இதுதான் இன்றைய நிலை கண்டியளோ!"

## பனையில் இருந்து வீழ்ந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப்.9

பனையில் இருந்து விழுந்தவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

கரவெட்டி மேற்கு, கௌடானையைச் சேர்ந்த ம.விவிரா (வயது53) என்பரே உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் தொழில் 19

## கொவிட் தொற்றால் யாழில் வயோதிபப் பெண் மரணம்!

யாழ்ப்பாணம், ஏப்.9

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற வயோதிபப் பெண் ஒருவர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். கோண்டாவில், கே.கே.எஸ். வீதியைச் சேர்ந்த 79 வயதுப் பெண் ஒருவரே உயிரிழந்துள்ளார். சிறுநீரக செயலிழப்புக் காரணமாக 19

## ஒரு சிலரின் பெயர்களைக் கூறி வாயை அடைக்க முயலாதீர்கள்



### பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் கோத்தா அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 9

ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்னர் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரிகள் மற்றும் குற்றவாளிகள் கண்டறியப்பட்டு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று நாம் தெரிவித்தமைக்காக, ஒரு சிலரின் பெயர்களைக் கூறி அவர்கள் பிரதான குற்றவாளிகள் என்று அறிவிக்கக் கூடாது. இது எமது வாயை அடைக்கும் முயற்சியாக 19

## தேசிய பாதுகாப்பு சபையில் நகர காவல் படை விவகாரம்!

கொழும்பு, ஏப்.9

தேசிய பாதுகாப்பு சபை நாடாளுமன்றக் கட்டடத்தில் நேற்று அவசரமாகக் கூடியது. பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் மாநகரைத் 19

## கொழும்பு மாநகர சபையை பார்த்தே நாமும் செய்தோம்



### மணிவண்ணன் விளக்கம்

யாழ்ப்பாணம், ஏப்.9

கொழும்பு மாநகர சபையாலும் காவல் படை அமைக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கும் நீல நிறத்தையுடைய சீருடையே வழங்கப்பட்டுள்ளது. அதைப்போன்றே நாமும் செய்தோம். பொலிஸாருக்கும் இதனைத் தெரியப்படுத்தினோம். அவர்கள் எமது சீருடைகளைத் தர வேண்டுமென 19

## துணி இறக்குமதிக்கும் கோத்தா அரசு தடா!!!

கொழும்பு, ஏப். 9

இலங்கையின் உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் அனைத்து வகையான துணிகளின் இறக்குமதிக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான வர்த்தமானிக்கு நாடாளு 19

## யாழ்ப்பாண நகர காவல் படைக்கு எதிராக கம்பு சுற்றும் சஜித் அணி!

கொழும்பு, ஏப்.9

யாழ்ப்பாணம் மாநகர முதல்வரால் உருவாக்கப்பட்டுள்ள 'காவல் படை' பணிக்குழுவினருக்கான சீருடை புலிகளின் காவல்துறை சீருடையை ஒத்ததாக உள்ளது. எனவே, இப்படையணி குறித்து அரசு ஆராய வேண்டும். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. சபை நடவடிக்கை இடம்பெற்றுக் கொண்டிருக்கையில் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெட்கித் தலைகுனிய வேண்டும் மைத்திரி!!

## பேராயர் மீண்டும் விளாசல்



**கொழும்பு, ஏப். 9**

**உண்மையை உரத்துச் சொன்னதால் முன்னாள் ஜனாதிபதிக்கும் அவரது சகாக்களுக்கும் என்மீது விமர்சனங்கள் வரலாம். ஆனால் அவர்கள் அனைவரும் வெட்கித் தலைகுனிய வேண்டியவர்கள். இவ்வாறு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றவாளியாகக் குறிப்பிடப்பட்டிருந்தும், அவருக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும், மைத்திரிபால ஆடை அணிந்துகொண்டுதான் அடுத்த தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் பேசுகின்றாரா? என்றும் கேள்வி எழுப்பியிருந்தார் பேராயர்.

அவரது இந்தக் கருத்துத் தொடர்பில் கவலையடைகின்றேன் என்று மைத்திரிபாலவும், சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலர் தயாசிறி, பேராயர் அரசியல் செய்கின்றார் எனவும் விமர்சனங்களை முன்வைத்திருந்தனர்.

இது தொடர்பில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்திடம், சர்வதேச ஊடகம் ஒன்றின் கொழும்புச் செய்தியாளர் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்தபோதே பேராயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது ;

இலங்கையில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களில் மிக மோசமான தாக்குதலே ஈஸ்டர் தாக்குதல். இந்தத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் குற்றவாளி என்று பெயரிட்டுள்ளது.

நாட்டின் தலைவர் என்ற ரீதியில், பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் அவரே இந்தத் தாக்குதலுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்.

அவர் பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்டதால்தான் அவரைக் குற்றவாளி என்று விசாரணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. அதனால்தான் அவர் மீது உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அரசை நான் கோருகின்றேன். இந்த உண்மையை நான் உரத்துச்சொன்னதால் எனது கருத்து அவருக்கு மனக் கவலையையும் அவரின் சகாக்களுக்கு விமர்சனங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

உண்மையில் அவர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டியவர்கள். அவர்களின் பொறுப்பற்ற நடவடிக்கைகளால்தான் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். உயிரிழந்தவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமெனில், பரிகாரம் கிடைக்க வேண்டுமெனில், குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

எனவே ஜனாதிபதி விசாரணை அறிக்கையில் குறிப்பிட்ட பரிந்துரைகளை விரைவில் செயற்படுத்துமாறு அரசிடம் நான் கோருகின்றேன்.

இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய அனைவர்மீதும் அரசு உடன் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (ஒ-5,22)

## யாழ்ப்பாண மாநகர சபை அமர்வில் பல தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.9

யாழ்ப்பாணம் மாநகர சபையின் விசேட அமர்வு மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையில் நேற்று நடைபெற்றது. யாழ்ப்பாணம் பொதுநூலகத்தில் நடந்த அந்த அமர்வில், பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் மாநகர சபைக்குச் சொந்தமான காணிகள் தொடர்பான விவரங்களை உறுப்பினர்கள் சமர்ப்பிக்க வேண்டும் என்று முதல்வரால் கோரிக்கை விடுக்கப்பட்டது. அது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

சபைக்குட்பட்ட பகுதியில் உள்ள கோழிக் கடைகளில் கழிவகற்றல் கட்டணம் அறவிடப்பட வேண்டும் என்ற பிரேரணை தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.


யாழ்ப்பாணம் மாநகர சபையின் சேவைகள் அனைத்தும் கணினிமயப்படுத்துவது தொடர்பில் முதல்வரால் சபையின் அனுமதி கோரப்பட்டது. அதற்கு சபை அனுமதி அளித்தது.

யாழ்ப்பாணம் புதிய நெடுந்தூர தனியார் பஸ் தரிப்பிடத்துக்கு பின்புறமுள்ள வட்டக்குளத்தை தூய்மை செய்வதற்கு ரில்கோ நிறுவனத்தால் அனுமதி கோரப்பட்டது. இந்த விடயம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டபோது சபை அனுமதி வழங்கியது.

அத்துடன், யாழ்ப்பாணம் நவீன சந்தைக் கட்டடத் தொகுதியில் உள்ள மாநகர சபைக்குச் சொந்தமான இரு கடைகளைக் குத்தகைக்கு விடுவதற்கான பகிரங்க அறிவித்தல் விடுக்கப்பட்டு, குத்தகை அடிப்படையில் அவற்றை வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (எ-320)

## உழவு இயந்திர பெட்டிக்குத் தீ;

### சந்தேகநபர் தலைமறைவு



கொடிகாமம், ஏப்.9

கொடிகாமம், வெள்ளாம்போக்கட்டிப் பகுதியில் உழவு இயந்திரப் பெட்டி ஒன்று கோடரியால் கொத்திச் சேதமாக்கப்பட்டுத் தீ வைக்கப்பட்டுள்ளது. பணக் கொடுக்கல் வாங்கல் தொடர்பான பிரச்சினையாலேயே உழவு இயந்திரப்பெட்டி தீ வைக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்துள்ளது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார் என்றும், அவரைக் கைதுசெய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என்றும் கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர். (எ-159)

## யாழ். நகர வர்த்தகர்களுக்கு இன்றும் பி.சி.ஆர். சோதனை

### தவறவிட்டவர்களுக்கு சந்தர்ப்பம்

யாழ்ப்பாணம், ஏப்.9

யாழ்ப்பாணம் நகரில் முடக்கப்பட்ட பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்களில் இரண்டாம் கட்ட பி.சி.ஆர். பரிசோதனை இதுவரை மேற்கொள்ளாதவர்களுக்கு இன்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 7.30 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில், அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் எடுக்கப்படவுள்ளன.

பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளாத எவரும் வர்த்தக நிலையங்களைத் திறக்கவோ அல்லது பணிபுரியவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நகரில் முடக்கப்பட்ட பகுதியைச் சேர்ந்த வர்த்தகர்கள் மற்றும் பணியாளர்கள் எந்த சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றாலும் இன்று நடக்கும் பி.சி.ஆர். பரிசோதனையில் பங்கேற்க முடியும் என்று யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது. (எ)

## யாழ்ப்பாண நகர வர்த்தகத்தில் சுகாதார நடைமுறை இறுக்கம்!

### வணிகர் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.9

கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக யாழ். நகரப் பகுதியில் முடக்கப்பட்ட பகுதியைச் சேர்ந்த வர்த்தகர்களில் தொற்று இல்லாதவர்கள் வர்த்தகம் செய்ய நேற்றிலிருந்து சுகாதாரப் பிரிவு அனுமதி வழங்கியுள்ளது.

வர்த்தகர்கள் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பில் சுகாதாரப் பிரிவு நடைமுறைகளை அறிவித்துள்ளது.

பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்கள் முகக்கவசம் அணிந்திருப்பது கட்டாயமானது. முகக்கவசம் அணியாது எவரையும் வர்த்தக நிலையங்களுக்குள் அனுமதிக்க வேண்டாம். முகக்கவசம் இன்றி யாராவது வந்தால் அவர்களுக்கு இலவசமாகவோ அல்லது பணத்துக்கோ முகக்கவசம் வழங்கியே வர்த்தக நிலையங்களுக்குள் அனுமதிக்க வேண்டாம். முகக்கவசம் அணியாதவர்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்டுபடுத்தப்படுவார்கள் என்று சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

வர்த்தக நிலையங்களில் ஒரே நேரத்தில் அதிகளவான பொதுமக்கள் கூடுவதைத் தவிர்க்க வேண்டும்.

வர்த்தக நிலையக் கதவின் கைபிடிகள் உட்பட, கிருமியகற்றும் பதார்த்தங்களைப் பயன்படுத்தி வர்த்தக நிலையங்களை அடிக்கடி சுத்தப்படுத்த வேண்டும். கொரோனாத் தடுப்பு சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்ற வேண்டும்.

வர்த்தக நிலையங்களின் முன்பகுதியில் பொலித்தீன் அல்லது கண்ணாடி போன்ற பாதுகாப்பு அமைப்புக்களை அமைத்து வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

புதுவருடத்தை முன்னிட்டு பொதுமக்களின் நன்மை கருதி மக்கள் அதிகமாகக் கூடுவதைத் தவிர்க்க, வர்த்தக நிலையங்கள் திறந்திருக்கும் நேரம் அதிகரிக்கப்பட்டுள்ளது. விடுமுறை தினங்கள் உட்பட அனைத்துத் தினங்களிலும் காலை 8.30 மணி முதல் இரவு 10 மணிவரை வர்த்தகம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இரவு 8 மணிவரை பஸ் போக்குவரத்து நடைபெறும் என்று இலங்கை போக்குவரத்துச் சபையினரும், தனியார் பஸ் சேவையினரும் அறிவித்துள்ளனர். பொதுமக்களுக்குத் தேவை ஏற்படின் சேவை நேரத்தை நீடிக்கவும் இணங்கியுள்ளனர். அதனால் மக்கள் நெருக்கடிகளைத் தவிர்த்து கொள்வனவு செய்ய முடியும்.

இந்த அறிவித்தல்களை பொதுமக்களும், வர்த்தகர்களும் கடைப்பிடித்து ஒத்துழைக்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் வணிகர் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஞ்சன் விவகாரத்தால் சபையில் கடும் அமளி

- கறுப்பு பட்டியணிந்து எதிரணி போராட்டம்
- நாடாளுமன்ற நடவடிக்கையும் இடைநிறுத்தம்

**கொழும்பு, ஏப்.9**
**சிறைத் தண்டனை அனுபவித்துவரும் ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமை தொடர்பில் சபாநாயகர் வழங்கிய தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் கறுப்புப் பட்டி அணிந்து சபை அமர்வில் பங்கேற்றனர்.**



நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

இதன்போது ரஞ்சன் விவகாரம் தொடர்பில் சபாநாயகர் விளக்கம ளித்தார். அரசமைப்பின் பிரகாரமே தான் செயற்பட்டுள்ளேன் எனவும் சுட்டிக்காட்டினார். இதனை எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கடுமையாக ஆட்சேபித்தார். உயர் நீதிமன்றம் செல்வதற்கான உரிமை ரஞ்சன் ராமநாயக்கவுக்கு இருக்கையில், தவறான முடிவை சபாநாயகர் எடுத்துவிட்டார் எனவும் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் சபாநாயகரின் தீர்மானம் சரிதான் என வாதிட்டு, இதற்கு முன்னர் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சில சம்பவங்களை உதாரணம் காட்டி பேசினார் சபை முதல்வர் தினேஷ் குணவர்தன,

இதன்போது ஆளும் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களுக்கிடையில் இடையிடையே கருத்து மோதல் ஏற்பட்டது. இந்நிலையில் பொன்சேகா எம்.பி. கருத்து வெளியிடுகையிலேயே அம்மோதல் உச்சம் தொட்டது.

அமைச்சர் சமல் ராஜபக்சவுக்கு ஆதரவு தெரிவித்து ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு சபைக்கு நடுவில் வந்தனர். பொன்சேகாவை கடுமையாக விமர்சித்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களும் கறுப்பு பட்டிகளை அணிந்து, ரஞ்சனின் உருவப்படங்களை தாங்கியவாறு எழுந்துநின்றனர். நீதிக்காக கோசம் எழுப்பினர். இதனால் சபைக்குள் அமளி துமளி ஏற்பட்டது.

இதனையடுத்து சபை நடவடிக்கைகளை சபாநாயகர் ஐந்து நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார். இவ்வாறு சபை ஒத்திவைக்கப்பட்ட பின்னரும் சபைக்குள் ஐக்கிய மக்கள் சக்தியினரின் போராட்டம் தொடர்ந்தது. 20 நிமிடங்களுக்கு பின்னர் சபை நடவடிக்கைகள் சபாநாயகர் தலைமையில் ஆரம்பமாகின. (ந-44)

## அடிப்படைவாத போதனை; சந்தேகத்தில் இருவர் கைது

கொழும்பு, ஏப்.9
அடிப்படைவாத போதனைகளை மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டில், பயங்கரவாத ஒழிப்புப் பிரிவினரால் ஒலுவில் பகுதியில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு போதனை நடத்தினர் என்ற கார ணத்தின் அடிப்படையி லேயே இந் நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## காணாமல் ஆக்கப்பட்டோரை தேடி அலைந்த 87 பேர் சாவு

வவுனியா,ஏப்.9
வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடி போராட்டங்களை மேற்கொண்டுவந்த 87 உறவுகள் இதுவரை உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி வவுனியா மாவட்டத்தில் 17 பேர் இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என்று காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர் . (ஐ-110)

## எம்.பிக்களின்
# சொத்து விவரங்கள் சபாநாயகர் கையில்

கொழும்பு,ஏப்.9
நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்து விவரங்களை வெளியிடுவதற்கான அதிகாரம் சபாநாயகருக்கே உள்ளது என்று நாடாளுமன்று அறிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்து விவரங்களைக் கோரி, தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஊடகவியலாளர் ஒருவரால் வினவப்பட்ட தகவலுக்கே இவ்வாறு பதிலளிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உதவிச் செயலாளர் நாயகமும், நாடாளுமன்றத் தகவல்கள் உத்தியோகத்தருமான டிக்கிரி கே. ஜயதிலக்கவால் அனுப்பப்பட்டுள்ள பதிலில் இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சொத்துக்கள், பொறுப்புக்கள் தொடர்பான வெளிப்படுத்துகைச் சட்டத்தின்படி, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இலங்கையிலும், இலங்கைக்கு வெளியிலும் உள்ள சொத்துக்களையும், பொறுப்புக்களையும் வெளிப்படுத்துவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், ஏனைய அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் ஆகியோரைத் தவிர, அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களதும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான வெளிப்படுத்துகை, நாடாளுமன்ற உறுப்பினர்களால் சபாநாயகருக்கு அறிவிக்கப்பட வேண்டும். எனவே, நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்து விவரங்களை வெளிப்படுத்தும் அதிகாரம் சபாநாயகருக்கே உள்ளது. எமக்கு அதிகாரம் இல்லை. சபாநாயகருக்கு முறையான ஒரு கோரலை விடுப்பதனூடாக மாத்திரமே, நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்து விவரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றுள்ளது. (ம-4)

## சமல் – பொன்சேகா மோதல் சொற்போர் களமானது சபை

*அநாகரிக வார்த்தைகளும் தாராளம்*

கொழும்பு, ஏப்.9
இறுதிப்போரை வழிநடத்திய முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கும், அமைச்சர் சமல் ராஜபக்சவுக்குமிடையில் சபையில் கடும் சொற்போர் மூண்டது. இருவரும் சரமாரியாக சொற்கணைகளைத் தொடுத்துக்கொண்டனர். இடையிடையே சபை நாகரீகமற்ற வார்த்தைப் பிரயோகங்களும் இடம்பெற்றன. நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மகிந்தயாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு வேளையின்போது, ரஞ்சன் ராமநாயக்க விவகாரம் தொடர்பில் சபாநாயகர் விளக்கம ளித்தார். ஏன் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நாடாளுமன்ற உறுப்புரிமையை இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டது என்பதற்கான காரணங்களையும் விவரித்தார். அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் சபையில் நடத்துக்கொண்ட விதம் குறித்தும் கவலை வெளியிட்டார்.

சபாநாயகரின் அறிவிப்பின் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கருத்து வெளியிட்டார்.

"மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவதற்கான உரிமை ரஞ்சன் ராமநாயக்கவுக்கு இருக்கின்றது. நிலைமை அப்படி இருக்கையில், ஏன் அவரது நாடாளுமன்ற உறுப்புரிமையை நீக்குவதற்கு அவசரமாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. தேர்தல் ஆணைக்குழுவுக்கு கடிதமும்அனுப்பட்டது.

ரஞ்சன் ராமநாயக்க விவகாரத்தில் சபாநாயகர் கையாண்ட அணுகுமுறை தவறானதாகும். ரஞ்சனுக்கான உரிமைகள் மறுக்கப்படக்கூடாது. உயர்நீதிமன்றத்தை நாடுவதற்கான உரிமை அவருக்கு இருக்கின்றது." என்று எதிர்க்கட்சித்தலைவர் சுட்டிக்காட்டியதுடன், சபாநாயகரின் செயலுக்கு கடும் எதிர்ப்பையும் வெளியிட்டார்.

அதன்பின்னர் தமது தரப்பு நியாயத்தை சபாநாயகர் முன்வைத்தார். அரசமைப்பின்பிரகாரமே நான்செயற்பட்டேன் எனக் குறிப்பிட்டதுடன், தேர்தல் ஆணைக்குழுவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தை நாடமுடியும் எனவும் குறிப்பிட்டார். இதன்போது ஒழுங்குப்பிரச்சினையொன்றை எழுப்பிய முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா," இராணுவத்திலுள்ள காட்டு நீதிமன்றமொன்றால் எனக்கு தண்டனை வழங்கப்பட்டது. நான் சிறை வைக்கப்பட்டேன்.

குறித்த தீர்ப்புக்கு எதிராக 3 நீதிமன்றங்க ளில் மேன்முறையீடு செய்திருந்தேன். இவ்வாறு மேன்முறையீடு செய்திருந்தும் எனக்கு நாடாளுமன்றம் வருவதற்கான வாய்ப்பை அப்போதைய சபாநாயகர் (சமல் ராஜபக்ச) வழங்கவில்லை." என்றார்.

இதன்போது எழுந்த அமைச்சர் சமல் ராஜபக்ச, " நாடாளுமன்றம் வருவதற்கு அனுமதி வழங்கினேன்." என்றார்.

பதிலுக்கு " நான் என்ன சொன்னேன் என்று விளங்கியதா" என பொன்சேகா கேட்டார்.

" என்ன என்று கேட்கிறாயா, நான் உமக்கு அனுமதி வழங்கவில்லையா" என சமல் பதிலளித்தார்.

" நான் சொல்வதைக் கேளும்" என்றார் பொன்சேகா.

" என்ன ஐசே கேட்பது, உன்னுடைய பலத்தை காட்ட முற்படுகின்றாயா, நீதான் மடையன். வெளியில் வா காட்டுகின்றேன்." என்றார் சமல் ராஜபக்ச.

இவ்வாறு இருவருக்குமிடையில் சொற்போர் இடம்பெற்றுக்கொண்டிருக்கையில் ஆளும் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களும் கூச்சல் குழப்பத்தில் ஈடுபட்டனர்.

சமல் ராஜபக்சவை சூழ்ந்துக்கொண்ட ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பொன்சேகாவை நோக்கி விமர்சனக் கணைகளைத் தொடுத்தனர். சபைக்கு நடுவில் வந்தும் கூச்சலிட்டனர். பதிலுக்கு ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களும் கருத்துக் கணைகளைத் தொடுத்தனர். இதனால் சபையில் கடும் அமளி துமளி ஏற்பட்டது. இதனால் சபை நடவடிக்கைகளை ஐந்து நிமிடங்களுக்கு சபாநாயகர் ஒத்திவைத்தார்.

சுமார் 20 நிமிடங்களுக்கு பின்னர் சபை கூடியது. இதன்போது " எவ்வளவு செய்தாலும் நன்றி இல்லை. எனது கருத்து எவரின் மனதையாவது புண்படுத்தியிருந்தால் வருந்துகின்றேன்." என சமல் ராஜபக்ச குறிப்பிட்டார். (ந-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மதுபான விற்பனை நிலையத்துக்கு எதிராக ஊர்காவற்றுறையில் போர்!

யாழ்ப்பாணம், ஏப். 9

**ஏற்கனவே 2016ஆம் ஆண் டில் மூடப்பட்ட மதுபானசாலையை தற்போதைய அரசில் அங்கம் வகிக் கும் அரசியல் சக்திகளின் துணையு டன் மீளவும் திறக்க மேற்கொள்ளப் படும் முயற்சிகளுக்கு எதிராக ஊர் காவற்றுறை பிரதேச செயலகத் துக்கு முன்பாக நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெ டுக்கப்பட்டது.**



ஊர்காவற்றுறை சுங்க வீதியில் 2016ஆம் ஆண்டு மூடப்பட்ட மது பான விற்பனை நிலையத்தை சுரு வில் பகுதியில் திறப்பதற்கு நடவ டிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இந்த விற்பனை நிலையத்தை திறப் பதற்கு மைத்திரி - ரணில் அரசின் காலத்தில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அனுமதி கோரப்பட் டது. அதற்கு மக்கள் எதிர்ப்பு வெளி யிட்டமைக்கு அமைவாக அனுமதி மறுக்கப்பட்டது.

இவ்வாறானதொரு நிலையில் தற் போதைய ஆட்சியாளர்களின் துணையுடன் அரசில் அங்கம் வகிக் கும், தீவகத்தை மையமாகக் கொண்டு கடந்த காலங்களில் அரசியல் மேற் கொண்டு வரும் கட்சியின் துணையு டன் மதுபான விற்பனை நிலை யத்தை மீளத் திறப்பதற்கான முயற் சிகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன. இதனை எதிர்த்து நேற்று கவனவீர்ப் புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தின் முடிவில் ஊர்காவற் றுறை பிரதேச செயலரிடம் மனுவும் கையளிக்கப்பட்டது. இந்தப் போராட் டத்தில் தீவக சிவில் அமைப்புக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னர் ஈ.சரவணபவன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் விந்தன் கனகரட்ணம், யாழ்ப்பாணப் பல்க லைக்கழக விரிவுரையாளர் மா.இளம் பிறையன், சமூக செயற்பாட்டாளர் குணாளன், வேலணை பிரதேச சபை உறுப்பினர் நாவலன், ஊர்காவற் றுறை பிரதேச சபை உறுப்பினர் கன கையா ஆகியோருடன் பொதுமக்க ளும் பங்கேற்றனர். (ஓ.319)

## சாரதி இல்லாமையால் தரித்து நிற்கும் பெக்கோ

வலி.தென்மேற்கு, ஏப்.9

பொது மக்களது நலன் கருதி வலி.தென் மேற்கு பிரதேச சபையால் ஒரு கோடி 25 லட்சம் ரூபாவுக்கு கொள்வனவு செய்யப் பட்ட பெக்கோ வாகனம் சாரதி இல்லாமை யால் பிரதேச சபை வளாகத்தில் காட்சிப் பொருளாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் உள்ள மயானங்கள் மற்றும் வெள்ள வாய்க்கால் கள் போன்றவற்றை வருடாவருடம் துப்பு ரவு செய்வதற்கு சபையிடம் பெக்கோ வாகனம் இல்லாமையால் இதுவரை காலமும் வாகனம் வாடகைக்கு அமர்த் தப்பட்டு வேலைகள் இடம்பெற்று வந்தன. இதனால் சபைக்கு வருடாவருடம் பல லட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டது. இது தொடர்பில் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் பெக்கோ வாகனம் வாங்க வேண்டிய அவசியம் குறித்து கருத்து தெரிவித்ததுடன், தீர்மானத்தையும் ஏகம னதாக நிறைவேற்றியிருந்தனர்.

இந்த தீர்மானத்துக்கு அமைவாக சபை நிதியிலிருந்து ஒரு கோடியே 25 இலட்சம் ரூபா செலவில் பெக்கோ வாகனம் கொள் வனவு செய்யப்பட்டு, ஐந்து மாதங்களாகி யும் பயிற்றப்பட்ட சாரதி இல்லாமையால் வாகனம் பிரதேச சபை வளாகத்தில் காட்சிப்பொருளாக நிறுத்தி வைக்கப்பட் டுள்ளது.

இது தொடர்பில் வலி.தென்மேற்கு பிர தேச சபைத் தவிசாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, பெக்கோ வாகனம் பாவிக்கப்படாமல் இருக்கிறது. அதனை இயக்குவதற்கான சாரதியை பெறுவதில் சிக்கல் நிலவுகிறது. சபையின் சம்பள அளவுத்திட்டத்துக்கு அமைய எந்தவொரு சாரதியும் முன்வருகிறார்கள் இல்லை. எனவே நாம் எமது சபை சாரதிகளை கொண்டு குறித்த பெக்கோ வண்டியை இயக்க தீர்மானித்துள்ளோம். விரைவில் பெக்கோ இயந்திரம் சேவையில் ஈடுபடும்- என்றார். (ஐ-115,319)

## அரசியல் ஆலோசனைப் பொறிமுறை புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு, ஏப். 9

இலங்கை வெளிநாட்டு அமைச்சு மற்றும் ஆப்கானிஸ்தான் வெளி விவகார அமைச்சு ஆகியவற்றுக்கு இடையில் அரசியல் ஆலோச னைப் பொறிமுறையொன்றை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப் பந்தம் நேற்றுமுன்தினம் கைச்சாத் திடப்பட்டது.




இரு தெற்காசிய நாடுகளுக்கிடையி லான வழக்கமான ஈடுபாடு மற்றும் கூட்டாண்மைக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் வெளிநாட்டு அமைச் சர் தினேஷ் குணவர்தன கைச்சாத் திட்டதுடன், கொழும்பிலுள்ள ஆப் கானிஸ்தான் தூதுவர் அஷ்ரப் ஹைதரி ஆப்கான் அரசாங்கத்தின் சார்பில் கைச்சாத்திட்டார்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், இரு வெளிநாட்டு அமைச்சுக் களதும் ஆக்கபூர்வமான வசதிய ளித்தல்களின் மூலம் இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் இருதரப் புப் பங்காண்மையானது மேலும் வளர்ச்சியடையும். அதனால், இருதரப்பு உறவுகளின் முழுமை யான வரம்புகளை வருடாந்த அடிப் படையில் மீளாய்வு செய்ய முடியும் என்று இரு நாடுகளும் தமது நம் பிக்கையை வெளிப்படுத்தின. (ஐ)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 9

ஆதிமயிலிட்டி காசிபூதராயர் ஆயல பரிபாலன சபை பொதுக் கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள் ளது.

இக் கூட்டத்தில் ஆலய குடமுழுக்கு கிரியைகள் தொடர்பாக கலந்துரை யாடப்படவுள்ளதால் அனைவரை யும் கலந்துகொள்ளுமாறு அலயத் தினர் அறிவித்துள்ளனர். (ஐ)

## ஜெனிவா விவகாரங்களை சரியாகவே கையாண்டோம்

### சபையில் தெரிவித்தார் வெளிவிவகார அமைச்சர்

கொழும்பு, ஏப். 9

ஜெனிவா விவகாரங்களைச் சரியாகவே கையாண்டோம். எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜெனிவா விடயங்களைக் கையாள்வதில் எமது நட்பு நாடுகள் மற்றும் எம்முடன் நெருக்கமாகச் செயற்படும் நாடுகளிடம் எமது தரப்புக் காரணி களை முன்வைத்தோம். ஜெனிவா நெருக்கடிகளை எமது அரசு சந்திக்கும் முதல் சந்தர்ப்பம் இதுவல்ல. எமது தூதுக்குழு மற்றும் தூதரகம் இந்த விடயத்தில் செய்ய வேண்டிய உயரிய சேவையைச் செய்துள்ளன- என்றார். (ம-4)

## சிவஞானசோதிக்கு யாழில் நேற்று அஞ்சலி





யாழ்ப்பாணம், ஏப். 9

தேசிய கொள்கைகள் பொருளாதார அபி விருத்தி மீள் குடியேற்றம் புனர்வாழ்வளிப்பு வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளை ஞர் விவகார அமைச்சின் முன்னாள் செயலாளர், அமரர் வேலாயுதம் சிவஞான சோதியின் நினைவஞ்சலி நிகழ்வு யாழ்ப் பாணத்தில் நேற்று நடைபெற்றது.

குறித்த நினைவஞ்சலி நிகழ்வு யாழ்ப் பாண மக்களின் ஏற்பாட்டில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் வட இலங்கை சங்கீத சபை மண்டபத்தில், சுகாதார நடை முறைகளைப் பின்பற்றி நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன், யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் செயலர் நா.வேதநாயகம், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செய லாளர் எல்.இளங்கோவன், துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் மற்றும் மத குருமார்கள் என பலர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத் தினர். (த-20,25)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இதுவும் தீவிரவாதமே!

நாட்டில் சிறுபான்மை இனத்தவருக்கு எதிரான பல்வேறு நடவடிக்கைகள் பன்முகப்பட்ட நோக்கத்துடன் ஒன்றன்பின் ஒன்றாக தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன .இதன் காரணமாக நாட்டின் எதிர்காலம் என்பது அநீதி அதிகாரத்தை மட்டும் பயன்படுத்தியே நெறிமுறைப்படுத்தப்படும் அபாயத்தை நோக்கி நகர்த்தப்படுகிறது. இத்தகைய சூழலில் அன்றாடம் புதிய புதிய அழுத்தங்களையும் அச்சுறுத்தல்களையும் ஏற்படுத்தும் வகையிலான அரச அறிவித்தல்களும் வந்துகொண்டே இருக்கின்றன.

இரு வாரங்களின் முன்னரே அரச தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் செயற்பட்டு வந்த தமிழர் அமைப்புகளையும் தமிழர்கள் சிலரையும் தடைசெய்வதாக அரசு அறிவித்தது. தற்போது பதினொரு இஸ்லாமிய அமைப்புகளுக்கு நாட்டில் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளமையானது ஒன்றும் ஆச்சரியம் தரும் விடயமேயல்ல. இப்படியான நகர்வு களை அரசு முன்னெடுக்கும் சாத்தியக்கூறுகள் பற்றிய சமிக்ஞைகள் எப்போதோ தென்படத் தொடங்கிவிட்டன.

தமிழர்கள் மீதானதும், தமிழ் அமைப்புக்கள் மீதானதுமான தடை தசாப்தங்களுக்கு முன்பதாகவே ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அதன் அண்மைக்கால நடவடிக்கைகள் யாவும் அதன் தொடர் நீட்சியேயாகும்.

இலங்கை முழுவதுமே ஒரு தனிச் சிங்கள தேசமாக உருவாக்க முனையும் மகாவம்சக் கனவை யதார்த்தமாக்கும் பொறிமுறையை மையப்படுத்தியே, சிறுபான்மைச் சமூகத்தவர்களுக்கு எதிரான பௌத்த சிங்கள பேரினவாத ஆட்சியாளர்களின் சகல நடவடிக்கைகளும் திட்டமிடப்படுகின்றன என்பதில் மாற்றுக் கருத்துகளுக்கு இடமில்லை.

ஒவ்வொரு ஆட்சி மாற்றத்தின்போதும் , அரசமைப்பு மாற்றத்தின்போதும், சட்டத் திருத்தங்களின்போதும் மேற்கொள்ளப்படும் தேசிய நலன் நோக்கிலானவை எனப் பிரசாரப்படுத்தப்படும் சட்டவாக்கங்களில் பெரும்பாலானவை பௌத்த சிங்கள பேரினவாதிகளின் அபிலாஷைகளை முன்னெடுக்கும் நோக்கிலானவை . இதனால் அவை சிறுபான்மை சமூகத்தவரின் நலன்களைப் பாதிக்கவே செய்தன. இந்த இன ஒடுக்கு முறை நோக்கிலான அரசியல் மூலோபாயங்கள் யாவும் பௌத்த சிங்களப் பேரினவாத அமைப்புகளாலும் மத பீடங்களாலும் ஆசீர்வதிக்கப்படுவதோடு அங்கீகரிக்கப்படுகின்றன என்பதே உண்மை. இது ஆட்சியாளரின் பலமாகவும் தமது அதிகாரத்தை மேலும் விருத்திசெய்து கொள்வதற்கான தளமாகவும் காணப்படுகிறது. இதுவே நாட்டின் தேசிய நல்லிணக்கம், ஒப்பிடவே முடியாத விரிசல் நிலைமையை அடைந்துள்ளமைக்கு காரணமாகும்.

தனிச் சிங்களச் சட்டம்,பௌத்தத்துக்கான முன்னுரிமை அங்கீகாரம்,பௌத்த சிங்கள தேசத்தை யதார்த்தமாக்க முனையும் எத்தனம் இவையனைத்தும் ஆட்சியாளர்களின் அதிகார உள்நோக்கமாக இருந்ததன் விளைவே இலங்கை இன்று சர்வதேச மனித உரிமைகள் பேரவையின் முன்னால் தடுமாறி நிற்பதற்கான காரணமாகும்.

இது சொல்லும் அழுத்தமான செய்தி என்னவென்றால் சிங்கள பௌத்த பேரினவாதமானது ஜனநாயக சோசலிசம் என்ற போர்வைக்குள்ளும், பௌத்த தார்மீகச் சிந்தனை என்ற கோஷத்துக்குள்ளும் தன்னை உருமறைப்புச் செய்துகொண்டு, அமைப்பினவாதமாகத் தீவிரம்கொண்டு வருகிறதென்பதையேயாகும்.

ஆக, தமிழ்த் தீவிரவாதம், இஸ்லாமிய அடிப்படைவாதம் என்று பேரச்சுறுத்தல் விடுத்துக்கொண்டும் அதன்பாற்பட்ட சிறுபான்மை இனத்தவரை அடக்கி,ஒடுக்கி,சட்டம் மூலம் நடவடிக்கைகளை எடுக்கப் பல்வேறு உத்திகளைக் கையாளும் அரசு, நாட்டின் சிங்கள பௌத்த தீவிரவாதம் அதாவது தீவிரவாதிகள் தன்னையே ஆட்டிப்படைக்க முயல்வதாக அச்சுறுத்தி, நெறிப்படுத்த முனைவதைச் சர்வதேசமும் கண்காணித்துக் கொண்டிருக்கிறது என்பதை அறியாதிருப்பது தான் பரிதாபமான விடயம்.

நேற்று வரை தமிழர், இன்று இஸ்லாமியர், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் இறுக்கமான நிலைப்பாட்டை வைத்துப்பார்த்தால்...... நாளை கிறிஸ்தவர்களா...? என் அரசின் அடக்குமுறை இலக்குகள் மாறி மாறி பாயக்கூடும் என்ற பயம் உருவாவதும் இயற்கையே... ஆக, சிறுபான்மையினரை இலக்குவைக்கும் பேரினவாதிகளின் நகர்வுகளும் அடிப்படைவாதமே! தீவிரவாதத்தின் மற்றொரு வடிவமே...!



# இரண்டு வாரங்களில் 2ஆம் கட்ட தடுப்பூசி

## கூறுகிறார் பவித்ரா



**கொழும்பு, ஏப்.9**

**எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 6ஆம் திகதிவரையான காலப்பகுதிக்குள் ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனகா தடுப்பூசிகளின் இரண்டாவது டோஸ் ஏற்றப்படும் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச 27/2 பிரிவின் கீழ் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

கடந்த ஜனவரி மாதம் 29 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதிவரை ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனகா தடுப்பூசிகள் முதற் கட்டமாக 9 லட்சத்து 24 ஆயிரத்து 687 பேருக்கு வழங்கப்பட்டுள்ளன.தற்போதைய விஞ்ஞான ரீதியான ஆய்வுகளின் பிரகாரம் முதல் தடுப்பூசி வழங்கப்பட்டு 12 வாரங்களின் பின்னர் இரண்டாவது தடுப்பூசி வழங்கப்படும்போது மிகவும் வீரியமான நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கப்பெறுவதாக நிரூபிக்கப்பட்டுள்ளது.


இதன்படி முதல் சுற்றில் தடுப்பூசி பெற்றவர்களுக்கு இம் மாதம் 23 ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 6ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் இரண்டாவது தடுப்பூசி ஏற்றப்படும். இம்மாதம் 23 ஆம் திகதியின் பின்னர் கட்டங்கட்டமாகவே இரண்டாவது தடுப்பூசி செலுத்தப்படும். இரண்டாவது தடுப்பூசியை வழங்குவதற்காக 3 லட்சத்து 56 ஆயிரத்து 730 தடுப்பூசிகள் சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவிடம் கையிருப்பில் உள்ளன.

9 லட்சத்து 24 ஆயிரத்து 687 பேருக்கு இரண்டாவது தடுப்பூசியை தற்போதைய சூழலில் வழங்க வேண்டியுள்ளது. இரண்டாவது தடுப்பூசியை வழங்க கையிருப்பில் உள்ள தடுப்பூசிகளுக்கு மேலதிகமாக 5 லட்சத்து 67 ஆயிரம் அஸ்ட்ராஜெனகா தடுப்பூசிகள் மேலும் தேவைப்படுகின்றன. இந்த தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் உரிய துறையினருடன் இணைந்து பணியாற்றி வருகிறது. எதிர்வரும் வாரங்களில் குறித்த தடுப்பூசி தொகை எமக்கு கிடைக்கும். ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனகா தடுப்பூசிகள் அனைத்தும் இந்தியாவின் சீரம் நிறு வனத்திடமிருந்து மாத்திரமே பெற்றுக்கொள்ளப்படும். அந் நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்ட தடுப்பூசிகளே முதல்கட்டத்தில் ஏற்றப்பட்டன.

இதேவேளை. உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுமதி கிடைத்த பின்னர் சீனாவின் சைனோஃபார்ம் தடுப்பூசியை இலங்கையில் பயன்படுத்துவது தொடர்பில், தேசிய ஔடதங்கள் அதிகாரசபை தீர்மானிக்கும். தற்போது இந்த தடுப்பூசிகளை இலங்கையில் உள்ள சீனப் பிரஜைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது-என்றார். (ந-44)

# சு.கவின் நலன்களை முன்னிறுத்தி முடிவு!

## தயாசிறி அறிவிப்பு



கொழும்பு, ஏப். 9

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலின்போது சுதந்திரக் கட்சிக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், சுதந்திரக் கட்சியின் நலன்களை முன்னிறுத்தியே முடிவுகள் எடுக்கப்படும் என்று சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

தற்போதும் நாம் பொதுஜன பெரமுனவுடனான கூட்டணியிலேயே இருக்கின்றோம். எதிர்காலத்தில் எவ்வாறு முன்னோக்கிச் செல்வது என்பது தொடர்பில் தீர்மானிக்க வேண்டும். சுதந்திரக் கட்சிக்கு அநீதி இழைக்காத வேலைத்திட்டங்களையே நாம் முன்னெடுப்போம். மாகாணசபைத் தேர்தலின்போது எடுக்கப்பட வேண்டிய முடிவுகள் தொடர்பில் கட்சியின் அடுத்தகட்டத் தலைவர்களுடன் பேச்சு நடத்தப்படும் - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுபலசேனா அடிப்படைவாத அமைப்பு இல்லையாம்!!!

## நற்சான்றிதழ் கொடுக்கிறது ஐ.தே.க.

கொழும்பு, ஏப். 9

**இலங்கையில் 11 முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புக்கள் தடை செய்யப்பட்டுள்ளன. இந்தத் தீர்மானத்தை வரவேற்கின்றோம். பொதுபலசேனா அமைப்பு சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களிடையே குழப்பங்களை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் அந்த அமைப்பை அடிப்படைவாத அமைப்பு என்று சொல்ல முடியாது. இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்தன தெரிவித்தார்.**



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரிகள் என்று இருவரை அரசு அறிவித்துள்ளது. அவர்கள்தான் சூத்திரதாரிகள் என்பதற்குரிய ஆதாரங்களும் வெளியிடப்படவேண்டும். ஏனெனில், சஹ்ரானுக்கும், நௌபர் மௌலவிக்கும் இடையில் தலைமைத்துவம் தொடர்பில் சிக்கல் ஏற்பட்டிருந்தது. எனவே நௌர் மௌலவியை சூத்திரதாரி என்று அரசு அறிவித்தமை தொடர்பில் சந்தேகம் இருக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே பொறுப்புக் கூறவேண்டியவர். தாக்குதலுக்கு புலனாய்வுத் துறையினர் தாக்குதல் தொடர்பான தகவலை அறிந்திருந்தால் நிச்சயம் ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபாலவுக்குத் தெரியப்படுத்தியிருப்பார்கள். அவர் அந்தச் சந்தர்ப்பத்தில் நாட்டில் இல்லை. வெளிநாட்டுக்குச் செல்வதாக இருந்தால் தனது பொறுப்புக்களை இன்னொருவரிடம் கையளித்திருக்க வேண்டும். மைத்திரிபால அதனைச் செய்யவில்லை - என்றார். (ஒ.இ)

# பிரச்சினைக்கு தீர்வு காணுங்கள் பிரிவினையை வளர்க்காதீர்கள்!!

## நீதி அமைச்சர் அலி சப்ரி அறிவுரை

கொழும்பு, ஏப். 9

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் பிரச்சினைக்குத் தீர்வைக் காணுங்கள். அதனை வைத்து பிரிவினையை வளர்க்காதீர்கள். முஸ்லிம்கள் எப்போதும் ஏனையோருடன் ஒற்றுமையாக வாழ்வதற்கே விரும்புகின்றார்கள். இவ்வாறு நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை நேற்றுமுன்தினம் முன்வைக்கப்பட்டது. இதன்போது உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈஸ்டர் தாக்குதலை சுயாலாப அரசியலுக்குப் பயன்படுத்தி இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை குழப்பக் கூடாது. இலங்கையிலுள்ள சகல முஸ்லிம்களும் அடிப்படைவாதத்துக்கு துணைபோகவில்லை. அவ்வாறு எந்தவொரு இடத்திலும் சொல்லப்படவில்லை. அதைவிட சாய்ந்தமருதில் குண்டுதாரிகள் தங்கியிருந்த வீட்டை அந்தப் பகுதி மக்களே பாதுகாப்புத் தரப்பினருக்கு அறிவித்திருந்தனர்.

உங்களுக்கு உங்கள் மார்க்கம். எங்களுக்கு எமது மார்க்கம் என்றே குர்ஆன் கூறுகின்றது. கொடை வழங்குதல், தொழுதல் என்பனவற்றைவிட ஏனையோர் மத்தியில் ஒற்றுமையை வளர்ப்பதை உயர்வான தொன்றாக நபிகள் நாயகம் குறிப்பிட்டிருக்கின்றார். குரோதத்தால் மேலும் குரோதம் வளரும் என்று புத்தபிரான் போதித்திருக்கிறார்.

இனவாத மற்றும் அடிப்படைவாத கருத்துக்களைப் பரப்பி மக்களை தூரமாக்காது மக்கள் மத்தியில் நல்லுறவை வளர்க்க அனைவரும் முன்வரவேண்டும். சந்தேகத்தை ஒதுக்கி கௌரவமான சமூகமாக வாழ்வதற்கான வாய்ப்பு இன்னும் இருக்கிறது - என்றார். (ஒ.இ)

# பாம் எண்ணெய் இறக்குமதியில் பாரபட்சத்துக்கு வாய்ப்பு அதிகம்

## எம்.பி ஹர்ஷ டி சில்வா சாடல்

கொழும்பு, ஏப். 9

பாம் எண்ணெய் இறக்குமதியை அனுமதிப்பத்திரத்தின் அடிப்படையில் மேற்கொண்டால் அரசுக்கு நெருக்கமான நிறுவனங்களுக்கு மட்டுமே அனுமதி கிடைக்கும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா குற்றஞ்சாடியுள்ளார்.



கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அனுமதிப் பத்திரத்தின் அடிப்படையில் பாம் எண்ணெயை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். வடை உள்ளிட்ட சிற்றுண்டிகள் விற்பனை செய்யும் ஆயிரக்கணக்கான வியாபாரிகள் நாட்டில் உள்ளனர். இவர்கள் சில்லறை விற்பனையாளர்களிட மிருந்தே எண்ணெயைப் பெற்றுக் கொள்வர். எனவே இவர்களுக்கு அரசாங்கம் வழங்கும் தீர்வு யாது ? அனுமதிப்பத்திரத்தின் அடிப்படையில் எண்ணெய் இறக்குமதிக்கு அனுமதியளிக்கப்பட்டால் அது முழுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்ட செயற்பாடாகவே அமையும் எனவும் அவர் கூறியுள்ளார். (வ-இ)



# அனைவருக்கும் பயன்தரக்கூடிய தேசிய சுகாதார கட்டமைப்பு

## விரைவில் உருவாக்கப்படும் என்கிறார் கோத்தா

நாட்டின் அனைத்துப் பிரதேச மக்களுக்கும் சமமான பயன்தரக்கூடிய தேசிய சுகாதார கட்டமைப்பொன்று விரைவில் உருவாக்கப்படும் என்று ஜனாதிபதி கோத்தா பய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் 43 ஆவது வருடாந்த அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் மக்களின் ஆரோக்கியத்தை உறுதி செய்வது எமது அரசாங்கத்தின் முதன்மை நோக்கமாகும். ஆகவே நீண்டகாலமாக நீடிக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வு காண்பதற்காக மருத்துவர்கள் மற்றும் ஏனைய சுகாதார சேவைகள் நிபுணர்களை உள்ளடக்கிய அனைத்து சுகாதாரத் துறையைச் சார்ந்தவர்களும் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுவது அவசியமாகும். தேசிய சுகாதார கட்டமைப்பை கிராமிய மட்டத்தில் வெற்றி கொள்வதன் அவசியம்மற்றும்அனைத்து மக்களுக்கும் சிறந்த சுகாதார சேவையை உறுதி செய்வதற்கு மருத்துவர்களின் பங்களிப்பு ஆகியவை முக்கி யமானதாக இருக்க வேண்டும் - என்றார். (ஐ)

# பேராயர் மல்கம் ரஞ்சித்துக்கு காதில் பூச்சுற்றுகிறது அரசு!

## ஐக்கிய மக்கள் சக்தி சாடல்

ஈஸ்டர் தாக்குதல் நடந்த கையோடு மௌலவி நௌபர் கைதுசெய்யப்பட்டிருந்தார். இவர் தாக்குதலின் சூத்திர தாரி என்று இதுவரை எங்கும் சொல்லப்பட்டிருக்கவில்லை. ஜனாதிபதி விசாரணைக் குழுவிலும் இவர் நிறுத்தப்பட வில்லை. தாக்குதலின் சூத்திரதாரிகள் கண்டறியப்படுவதற்கு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை காலக்கெடு விதித்ததும், எப்போதோ கைதான மௌலவி நௌபரைச் சூத்திரதாரி என்று இந்த அரசு சொல்கின்றது. இது பேராயரை ஏமாற்றும் நாடகம் - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஈஸ்டர் பெருநாளன்று, ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரிகள் கண்டறியப்பட்டு நீதி நிலைநாட்டப்படவேண்டும். அதுவும் ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்னர் நீதி நிலைநாட்டப்படவேண்டும் என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கூறியிருந்தார்.

அரசு உடனே திடுதிடுப்பென, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்டு சிறையிலுள்ள மௌலவி நௌபர் தான் தாக்குதல் சூத்திரதாரி என்று அறிவித்தது. இது திருப்தியா என்று பேராயரிடம் கேட்கின்றோம்.

ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்னர் தனது பொறுப்பை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக அரசு இவ்வாறு செயற்படுகின்றது. மௌலவி நௌபர் பிரதான சூத்திரதாரி என்பதை நம்பமுடியாது. உண்மையான சூத்திரதாரியை மறைப்பதே அரசின் நோக்கம்.

பேராயரை அமைதியாக்கவே இந்த அவசர அறிவிப்பை அரசு வெளியிட்டிருக்கின்றது. அரசின் இவ்வாறான தவறுகளை மறைப்பதற்காக சில மதகுருமார்களும் நாடகங்களை அரங்கேற்றுகின்றனர். இவ்வாறான நாடகங்களால் ஏமாந்துவிட வேண்டாம் என்று மக்களைக் கோருகின்றோம் - என்றார். (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜமாஅத்தே இஸ்லாமி தொடர்பான குற்றச்சாட்டுகள் ஆதாரம் அற்றவை

## அந்த அமைப்பு தன்னிலை விளக்கம்

**கொழும்பு, ஏப். 9**

**இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி தொடர்பில் உயிர்த்த ஞாயிறு விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றதும் ஆதாரமற்றவையுமாகும். அவற்றை இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி நிராகரிக்கிறது - இவ்வாறு அந்த அமைப்பு அறிக்கையிட்டுள்ளது.**

இது தொடர்பில் குறித்த அமைப்பால் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையின் சாராம்சம் வருமாறு:

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி 1954ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு சமய இயக்கமாகும். இலங்கை நாட்டினதும், இவ்வமைப்பினதும் யாப்புகளுக்கு உடன்படும் வகையில் தனது அங்கத்தவர்களுக்கும் அபிமானிகளுக்கும் நலன்புரி சேவைகளை வழங்குவதை அது நோக்கமாகக் கொண்டுள்ளது.

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி ஓர் அமைப்பு என்ற வகையில் உயிர்த்த ஞாயிறு விசாரணை ஆணைக்குழுவின் முன்னிலையில் அதன் பக்க நியாயங்களை முன்வைக்க சந்தர்ப்பம் அளிக்கப்படாமை இயற்கை நீதியின் விதிமுறைகளை மீறும் வகையில் அமைந்த செயற்பாடாகும். இந்நிலையில், ஒரு பிரதான முஸ்லிம் சிவில் சமூக அமைப்பான இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியை தடை செய்ய வேண்டுமென உயிர்த்த ஞாயிறு விசாரணை ஆணைக்குழு கோரியிருப்பதையிட்டு இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி தனது ஆழ்ந்த கவலையை தெரிவிக்கின்றது.

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி குறிப்பிடத்தக்க அளவிலான ஆயுதங்களை தன்வசம் வைத்துள்ளது எனவும், உள்நாட்டில் இடம்பெயர்ந்து முகாம்களில் வசித்து வந்த தெரிவுசெய்யப்பட்ட சுமார் 150 முஸ்லிம் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்துள்ளது எனவும் விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை அதிர்ச்சியூட்டும் தகவல்களை குறிப்பிட்டுள்ளது.

ஆணைக்குழு இக்குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் தன்னோடு இணைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவிலிருந்து ஒரு குழுவை அனுப்பி குறித்த அந்த ஆயுதங்களைக் கைப்பற்றி அந்த ஆயுதங்களையும் அவற்றை வைத்திருந்தவர்களையும் ஆணைக்குழுவின் முன் கொண்டு வந்திருக்கலாம். இந்த அடிப்படையற்ற, ஆதாரமற்ற குற்றச்சாட்டு முற்று முழுதாக உண்மைக்குப் புறம்பானது என்பதுடன், அதனை இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி முற்றாக மறுக்கிறது.

இது போன்ற முன்மொழிவுகள் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி, அதனுடன் இணைந்த ஒரு சுயாதீன அமைப்பான ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம் மற்றும் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் முன்னாள் தலைவர் உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பர் ஆகியோர் பற்றி ஆணைக்குழு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஏனைய விடயங்களின் நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்குகின்றன - என்றுள்ளது. (ம)

# அரசைப் பலவீனப்படுத்த எதிர்க்கட்சியினர் முயற்சி

## ஆளும் தரப்பினரும் உடந்தை என கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 9

**அரசை பலவீனப்படுத்தும் வகையில் எதிர்க்கட்சியினர் தேவையற்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருகின்றனர். ஆளும் தரப்பினர் சிலரும் அதற்கு உட்ந்தையாக உள்ளனர் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் நாட்டு மக்களுக்கு பல வாக்குறுதிகளில் வழங்கியுள்ளது. தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகள் பல சவால்களுக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டுள்ளன. அரசாங்கத்தை பலவீனப்படுத்த எதிர்க்கட்சியினர் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர். ஆளும் தரப்பின் ஒரு சில உறுப்பினர்களும் எதிர்க்கட்சியினருக்கு ஏற்றாற்போல் செயற்படுகிறார்கள். ஒரு தரப்பினரது நோக்கம் அரசாங்கத்தை பலவீனப்படுத்துவதாக காணப்படுகிறது. இவ்வாறான செயற்பாடு மக்களாணைக்கு முரணானது என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது. பழைய தேர்தல் முறையில் தேர்தலை நடத்த மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் என்பவை, அமைச்சரவையில் முன்வைத்த யோசனை தொடர்பில் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு கட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது - என்றார். (ம)

# எதிர்ப்பை சமாளிக்கத்தான் மௌலவி நௌபர் பலிக்கடா

## முஜிபுர் ரஹ்மான் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 9

கத்தோலிக்க மக்கள் உள்ளிட்ட பல தரப்பினராலும் அரசுக்கு எழுந்துள்ள எதிர்ப்பைச் சமாளிக்கவே, ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியாக மௌலவி நௌபர் பலிக்கடாவாக்கப்பட்டுள்ளார் என்று தெரிவித்தார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரி நௌபர் மௌலவி என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். உயிர்த்த ஞாயிறு தாக்குதலை கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது பிரதான பரப்புரையாக இந்த அரசு பயன்படுத்தியது. எனினும் தேர்தலின் பின்னர் எவரும் கைதுசெய்யப்படவில்லை.

மாறாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டது. அந்த அறிக்கை முழுமையானதாகக் காணப்படவில்லை. எனினும் அதில் கூறப்பட்டிருந்த சில முக்கிய காரணிகளின் அடிப்படையில் அவதானிக்கும்போது சஹ்ரானுக்கு அப்பால் பிறிதொரு சக்தி இந்த தாக்குதலின் பின்னணியில் உள்ளதா என்ற சந்தேகம் எழுகிறது.

கடந்த அரசின் காலத்தில் கைதுசெய்யப்பட்ட நௌபர் மௌலவியே இதன் பிரதான சூத்திரதாரி என்று கூறுகின்றனர். ஆனால் தற்போதைய அரசு முன்னர் எதிர்க்கட்சியாக இருக்கும் போது பிரதான சூத்திரதாரி தொடர்பில் பல பரப்புரைகளை முன்னெடுத்தது. அவ்வாறெனில் தற்போதைய அரசால் குறிப்பிடப்பட்ட பிரதான சூத்திரதாரி யார்? இதனை அவர்கள் வெளிப்படுத்த வேண்டும் - என்றார். (ம-இ)

# ஈஸ்டர் தாக்குதலால் இனங்களிடையே விரிசல்

## சுசில் பிரேமஜயந்த விசனம்

கொழும்பு, ஏப். 9

ஈஸ்டர் தாக்குதலால் நாட்டின் பொருளாதாரம் சரிவடைந்தது. இனங்களுக் கிடையில் சந்தேகக்கண் கொண்டு பார்க்கும் நிலைமையும் உருவானது. இவ்வாறு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விவாதத்தின் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈஸ்டர் தாக்குதலைப் பயன்படுத்தியே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வெற்றி பெற்றார் என எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. அது முற்றிலும் தவறானது. ஈஸ்டர் தாக்குதல் நடைபெற்ற காலத்தில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பேச்சே நாட்டில் இருக்கவில்லை.

நல்லாட்சி அரசின் காலத்தில் ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் காணப்பட்ட முரண்பாடுகள், பொருத்தமற்ற கொள்கைகள், மத்திய வங்கி நிதி மோசடி தொடர்பில் மக்கள் மத்தியில் ஏற்பட்ட எழுச்சி மற்றும் தேசிய பாதுகாப்புத் தொடர்பில் நல்லாட்சி அரசின் தவறுகளே என்பவையே கோத்தாபயவின் வெற்றிக்குக் காரணம் - என்றார். (ஒ.இ)

# மனித உரிமைகள் பேசுவோர் பயங்கரவாதிகளுக்கே ஆதரவு

## இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி கண்டுபிடிப்பு

கொழும்பு, ஏப். 9

நாட்டில் மனித உரிமைகள் பற்றிப் பேசுபவர்கள் புலம்பெயர் தமிழ் மக்களின் தேவைக்காகவும், பயங்கரவாதிகளுக்கு ஆதரவாகவுமே செயற்படுகின்றனர் என்று தெரிவித்தார் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்ணாண்டோபுள்ளே.

ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேவின் 13ஆவது நினைவுதின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:

நாட்டில் எத்தகைய பயங்கரவாத செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டாலும் அவற்றை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை அனைத்து அரசியல் தலைவர்களும் ஒன்றிணைந்து முன்னெடுக்க வேண்டும். அதனூடாக இந்த நாட்டைப் பாதுகாத்து எமது எதிர்கால சந்ததியினரிடம் கையளிக்க முடியும்.

அதேவேளை, மனித உரிமைகள் தொடர்பில் பேசுபவர்கள், புலம்பெயர் தமிழர்களின் தேவைக்கேற்ப பயங்கரவாதிகளையே பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்கள். எனினும் எனக்கு இழைக்கப்பட்ட அநீதியைத் தட்டிக்கேட்பதற்கு எவரும் இல்லை. இது குறித்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நீதிமன்றத்தீர்ப்பு எதுவாக இருப்பினும், நான் இழந்தவற்றை மீளப்பெற முடியாது. பயங்கரவாத செயற்பாடுகளின் விளைவாக என்னைப்போன்று கணவனை, பிள்ளையை மற்றும் உறவினர்களை இழந்த பலர் இருக்கின்றார்கள். எனினும் அவர்கள் சார்பாகப் பேசுவதற்குத் தற்போது மனித உரிமைகள் தொடர்பில் பேசுபவர்கள் முன்வராமை கவலையளிக்கிறது - என்றார். (ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா பிரதேச செயலகத்தில்
# விநியோகமின்றி தேங்கிக் கிடக்கும் முன்பள்ளிகளுக்கான உதவிப்பொருள்கள்

**வவுனியா, ஏப்.9**

**கொரோனாத் தொற்றுக் காரணமாக முன்பள்ளி மாணவர்களின் சுகாதாரத்தை மேம்படுத்த உலக வங்கியால் வழங்கப்பட்ட கைகழுவும் உபகரணங்கள், வவுனியா பிரதேச செயலகத்தில் நீண்ட நாள்களாக தேங்கிக் காணப்படுகின்றன என்று சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.**



மகளிர் மற்றும் சிறுவர் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் ஊடாக உலக வங்கியால் வழங்கப்பட்ட குறித்த பொருள்கள் பிரதேசத்தில் உள்ள முன்பள்ளிகளுக்கு பகிர்த ளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

எனினும் இவை இதுவரை பகிர்ந் தளிக்கப்படாமல் காணப்படுவதற்கு அரசியல்வாதிகள் காரணமாக உள்ளனரா என சந்தேகம் எழுந்துள்ளது.

கிராமப்புறங்களில் உள்ள பல முன்பள்ளிகள் நிதி வசதியின்றி போதுமான சுகாதார மேம்பாட்டு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வரும் நிலையில். பிரதேச செயலகத்தில் ஒரு மாதத்துக்கும் மேலாக குறித்த பொருள்கள் தேங்கிக் கிடப்பது தொடர்பில் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வவுனியா பிரதேச செயலரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

மகளிர் மற்றும் சிறுவர் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினூடாக பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனினும் அமைச்சினூடாகவே வழங்கப்பட வேண்டும் என எமக்கு தெரிவிக்கப்பட்டதன் காரணமாக பொருள்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இப்பொருள்கள் அவர்களூடாக வழங்கப்படும் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர், முன்பள்ளிகளுக்கு வழங்கப்படும் - என்றார். (ஐ-110)

## யாழ். போதனாவின்
# சத்திர சிகிச்சை தொகுதிகள் மீண்டும் சேவையில்

யாழ்ப்பாணம், ஏப்.9

யாழ். போதனா மருத்துவமனையின் சத்திரசிகிச்சை தொகுதிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை மீள ஆரம்பிக்கப்படவுள்ளன என்று யாழ்.போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் ஸ்ரீ பவானந்தராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சத்திரசிகிச்சை கூடத்தில் அண்மையில் இனங்காணப்பட்ட கொவிட்19 தொற்றுக் காரணமாக சில சத்திர சிகிச்சை தொகுதிகள் மூடப்பட்டிருந்தன.

இதையடுத்து அங்கு தொற்று நீக்கச் செயற்பாடுகள் மிக வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருவதைத் தொடர்ந்து, எதிர்வரும் 15 ஆம் திகதி அதனை மீளவும் செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-20)

# அமைப்புக்களின் தடை அநீதியின் வெளிப்பாடு
## தவ்ஹீத் அமைப்பு குற்றச்சாட்டு

நாட்டில் தவ்ஹீத் அமைப்புக்கள் உள்ளிட்ட 11 அமைப்புக்களுக்கு தடை விதிக்க சட்ட மா அதிபர் அனுமதி வழங்கியுள்ளார் என்று வெளியாகியுள்ள செய்தி, நீதியின் பெயரால் அநீதியை நிலைநாட்டுவதற்கான முனைப்பு இவ்வாறு சிலோன் தவ்ஹீத் ஜமாஅத் அமைப்பின் பொதுச் செயலாளர் அப்துர் ராசிக் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2019ஆம் ஆண்டு சஹ்ரான் ஹாஷிம் என்ற பயங்கரவாதி மேற்கொண்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளில் ஒரு பகுதியாக, சட்டமா அதிபரின் இந்தப் பரிந்துரையும் அமைந்துள்ளது. தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால் நீதியைப் பெற்றுத் தருகிறோம் எனும் பெயரில் குற்றத்துடன் எவ்வித தொடர்பும் அற்ற, மாபெரும் அழிவொன்று நடக்க இருக்கிறது என்று போதிய தகவல்களை உடனடியாக பாதுகாப்புத்துறைக்கு வழங்கிய ஊவது உள்ளிட்ட தவ்ஹீத் அமைப்புக்களைத் தடை செய்யவுள்ளதாகக் கூறுவது நீதியின் பெயரால் அநீதியை நிலைநாட்ட முனைவதாகும் - என்றுள்ளது. (ம-4)

# வரணிப் பகுதியில் வீடு புகுந்து தாக்குதல்

சாவகச்சேரி, ஏப்.9

வீடு ஒன்றினுள் இனந்தெரியாத நபர்கள் புகுந்து தாக்கியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் வெட்டுக்காயங்களுக்கு இலக்காகி சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு வரணி இயற்றாலையில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-9)

# சட்டவிரோத மது விற்பனை; ஒருவர் கைது

கிளிநொச்சி, ஏப்.9

சட்டவிரோதமான முறையில் டின் பியர்களை விற்பனை செய்ய முயன்ற ஒருவரை கிளிநொச்சி மாவட்ட மது ஒழிப்புப் பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுண்டிக்குளம் சந்திப்பகுதியில் விற்பனைக்கு மறைத்துவைக்கப்பட்டிருந்த 29 டின் பியர்களுடனேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் பின்னர் குறித்த நபர் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என கிளிநொச்சி மாவட்ட மது ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி டி எம் சதுரங்க தெரிவித்துள்ளார். (ச-113)

# கண்டல் காட்டுப் பகுதியில் பரவலாக கசிப்பு உற்பத்தி
## கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை

சாவகச்சேரி,ஏப். 9

வரணி வடக்கு கண்டல் காட்டுப் பகுதியில் இடம் பெற்றுவரும் கசிப்பு உற்பத்தியை கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும்என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ள னர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

தென்மராட்சி, வரணி வடக்குப் பகுதியில் நீண்ட தூரத்துக்கு கண்டல்காடு காணப்படுகிறது. இந்தக் காட்டுப் பகுதியில் நீரேரியும் காணப்படுவதால் கசிப்பு உற்பத்தி அதிக அளவில் இடம்பெற்றுவருகிறது. குறித்த பகுதியில் இரவு பகலாக கசிப்பு உற்பத்தி செய்யப்பட்டு வரும் நிலையில் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தும் பயன் கிடைக்கவில்லை.

> “தென்மராட்சி, வரணி வடக்குப் பகுதியில் நீண்ட தூரத்துக்கு கண்டல்காடு காணப்படுகிறது. இந்தக் காட்டுப் பகுதியில் நீரேரியும் காணப்படுவதால் கசிப்பு உற்பத்தி அதிக அளவில் இடம்பெற்றுவருகிறது.

எனவே பொலிஸார் விரைவாக செயற்பட்டு குறித்த பகுதியில் இடம்பெறும் கசிப்பு உற்பத்தியை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம் - என்றனர். (ஐ-9)

# முஸ்லிம்களை இலக்குவைத்து இன்று பல்வேறு துன்பியல்கள்!
## ரிஷாத் எம்.பி. அதிருப்தி



கொழும்பு, ஏப். 9

இலங்கையில் 30 ஆண்டுகளாகத் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட துன்பியல்கள் போன்று, தற்போது கடந்த 10 ஆண்டுகளாக முஸ்லிம்களுக்கு எதிராக பல துன்பியல்கள் அரங்கேற்றப்படுகின்றன. - இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான ரிஷாட் பதியுதீன்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ் மக்களுக்கு எதிராக 30 வருடகால அடக்குமுறைகள் மேற்கொள்ளப்பட்டதைப் போன்று, கடந்த 10 வருடங்களாக, முஸ்லிம் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுக்குப் பின்னர், 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் எவரையும் விடுவிக்குமாறு, நான் எவருக்கும் அழுத்தம் கொடுக்கவில்லை. ஆனால், சஹ்ரான் என்பவர் ஆபத்தானவர் என்றும் அவரைக் கைதுசெய்யுமாறும், 2017ஆம் ஆண்டே கூறிய அசாத் சாலியை, ஈஸ்டர் தாக்குதலோடு தொடர்புடையவரெனக் கூறி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்திருப்பது எந்த வகையில் நியாயம்? பயங்கரவாதிகளைக் கைது செய்வதற்குப் பதிலாக பயங்கரவாதத்துக்கு எதிராகக் குரல் கொடுக்கும் அப்பாவி முஸ்லிம்கள் கைது செய்யப்படுகின்றனர்- என்றார். (ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபாய வலயங்களில் 10,000 வீடுகள் அழிப்பு

### புதிய வீடுகள் வழங்கவும் நடவடிக்கை

கொழும்பு,ஏப். 9

நாடு முழுவதும் உள்ள அபாய வலயங்களில் சுமார் 10 ஆயிரம் வீடுகளை அகற்றுவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என்று சமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குறிக்கப்பட்ட அபாய வலயங்களில் சுமார் 10 ஆயிரம் வீடுகள் தேசிய கட்டட ஆய்வு நிறுவகத்தால் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவ்வாறான வீடுகளை அகற்றி, வேறு வீடுகளை நிர்மாணிப்பதற்கு, உரிமையாளர்களுக்கு காணிகள் வழங்கப்படவுள்ளன.

பெருந்தோட்ட பகுதிகளில் காணிகளைப் பெறுவதில் சில சிக்கல்கள் காணப்படுகின்றன. அவற்றை நிவர்த்தி செய்து, வீடுகளை நிர்மாணிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ப-4)

### வவுனிக்குளத்தின் கீழ்

# 600 ஏக்கர் நிலப்பரப்பில் உப உணவுச் செய்கை

முல்லைத்தீவு, ஏப். 9

**முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் கீழ் 600 ஏக்கர் நிலப்பரப்பில் உப உணவுப் பயிர்ச் செய்கை மேற்கொள்வதென என்று நேற்றுமுன்தினம் நடைபெற்ற வவுனிக்குளத்துக்கான சிறுபோக நெற்செய்கைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.**

முல்லைத்தீவு மேலதிக மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் முல்லைத்தீவு பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் ந.சுதாகரன், துணுக்காய் பிரதேச செயலர், வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் கை.பிரகாஸ், துணுக்காய் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் கீழ் 2 ஆயிரத்து 754 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதுடன், 600 ஏக்கரில் உப உணவுப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

'வவுனிக்குளத்தின் நீர் மட்டம் 22 அடியாகக் காணப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தின் இரு கண்கள் போல முத்தையன்கட்டுக் குளமும், வவுனிக்குளமும் காணப்படுகின்றன. எனவே குளத்தில் உள்ள நீரை 100 வீதம் விவசாயிகள் சிறந்த முறையில் பயன்படுத்தி நெற்செய்கையை வெற்றிகரமாக முன்னெடுக்க வேண்டும்' என்று முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலர் தெரிவித்துள்ளார். (ஐ-13)



## மறைந்த ஆயருக்கு ஜேர்மனில் அஞ்சலி

கொழும்பு, ஏப். 9

மறைந்த மன்னாரின் முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கு ஜேர்மன் தலைநகரில் அஞ்சலி நிகழ்வு நேற்றுமுன்தினம் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

ஆண்டகையின் திருவுருவப் படத்துக்கு பேர்லின் தமிழ் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகத்தின் பொறுப்பாளரால் சுடர் ஏற்றப்பட்டு, தொடர்ந்து மக்களால் மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (ச)




## முடக்கத்திலிருந்து மீண்டது மெல்போர்ன்; சிறிலங்கன் எயார்லைன்ஸ் தரையிறக்கம்

கொழும்பு, ஏப். 9

ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானம் நேற்றுத் தரையிறங்கியது. மெல்போர்ன் நகரம் முடக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்ட நிலையில், முதலாவதாகத் தரையிறங்கிய விமானமாக சிறிலங்கன் எயார்லைன்ஸ் பதிவாகியது.

11 பயணிகளுடன் பயணித்த இந்த விமானம் ஆஸ்திரேலிய நேரப்படி நேற்று அதிகாலை 4.30 மணியளவில் தரையிறங்கியது. பயணிகள் அனைவரும் இரு வாரங்கள் தனிமைப்படுத்தலுக்காக ஹொட்டல்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (ஒ-இ)

## வவுனியாவில் வாள்வெட்டு; சந்தேகத்தில் இருவர் கைது



வவுனியா, ஏப்.9

வாள்வெட்டில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் வவுனியா திருநாவற்குளம் பகுதியில் வைத்து இருவர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த நான்காம் திகதி குழு ஒன்று இளைஞர் ஒருவரை கண் மூடித்தனமாகத் தாக்கியதில் அவர் படுகாயமடைந்திருந்தார்.

எனினும் எவரும் கைதுசெய்யப்படவில்லை. இந்நிலையில் நேற்றுமுன்தினம் குறித்த தாக்குதல் தொடர்பான காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியிருந்தன. இதையடுத்தே சந்தேக நபர்களாக இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-ஐ.-110)

## மத்தள விமான நிலையம் வருமானம் ஈட்டுகிறதாம்!

கொழும்பு, ஏப். 9

மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்ட மத்தள விமான நிலையம் ஊடாக 4 ஆயிரத்து 453 லட்ச ரூபா வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது என அரசு அறிவித்துள்ளது.

விமான நிலையம் திறக்கப்பட்டதிலிருந்து கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வரையிலான 8 ஆண்டுகளில் 10 ஆயிரத்து 206 விமானங்கள் அங்கு தரையிறங்கிச் சென்றுள்ளன எனவும் இதன் ஊடாக 4 ஆயிரத்து 453 லட்சம் ரூபா வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளது எனவும், விமான சேவைகள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

'விமான நிலையத்துக்கு அருகில் ஒரு சுதந்திர வர்த்தக வலயத்தை நிர்மாணிப்பதற்கான புதிய திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. முதலீட்டாளர்களுடன் வெற்றிகரமான பேச்சுக்களும் நடத்தப்பட்டுள்ளன. இந்த முன்னேற்றங்கள் விமான நிலையத்தைப் பொருளாதார ரீதியாக லாபகரமாக்கும்' என்றும் அமைச்சர் கூறினார்.

விமான நிலையத்தை அமைப்பதற்கு சீனாவிடமிருந்து 190 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வாங்கப்பட்டுள்ளதுடன், விமான நிலையத்தை அமைக்க 247 மில்லியன் டொலர் செலவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

## வீட்டுத்திட்ட பயனாளிகளின் பெயர் விவரங்கள் வெளியீடு

பளை,ஏப் .9

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் வீட்டுத்திட்டத்துக்கு தெரிவான பயனாளிகளின் பெயர் விவரங்கள் அந்தந்த கிராம அலுவலர் பிரிவு அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

காட்சிப்படுத்தப்பட்ட பயனாளிகள், தகுதியில்லாதவர் அல்லது பொருத்தமற்றவர்கள் என தங்களால் அடையாளப்படுத்தப்படும் போது அதற்குரிய காரணங்களுடன், பிரதேச செயலகத்துக்கு 14 நாள்களுக்குள், எழுத்து மூலமோ அல்லது நேரடியாகவோ தங்கள் முறைப்பாட்டு கடிதங்களை சமர்ப்பிக்க முடியும்.

அத்துடன் குறிப்பிட்ட தினத்துக்குப் பின்னர் எந்தவித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)



## விசுவமடுக்குளத்தில் மீன்குஞ்சுகள் விடுவிப்பு!

முல்லைத்தீவு, ஏப். 9


தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அதிகாரசபையால் முல்லைத்தீவு விசுவமடுக் குளத்தில் 75 ஆயிரம் மீன்குஞ்சுகள் விடப்பட்டுள்ளன.

நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் விசுவமடு மாணிக்கபுரம் மற்றும் வள்ளுவர்புரம் நன்னீர் மீன்பிடிச் சங்கங்களின் கோரிக்கைக்கு அமைவாக தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அதிகாரசபையினரும் 57ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த இராணுவத்தினரும் இணைந்து குறித்த செயற்பாட்டை மேற்கொண்டனர். (ச-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி சக்தி அம்மன் வித்தியாலய மாணவர்களுக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் செ.மகேஸ்வரன் கற்றல் உபகரணங்கள் வழங்கினார். (ச-9)



தமிழர்களின் பூர்வீக ஆலயமான முல்லைத்தீவு வவுனிக்குளம் சிவன் ஆலய புனரமைப்புப் பணிகளை, முல்லைத்தீவு மேலதிக மாவட்டச் செயலர் தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் சென்று பார்வையிட்டனர். (ச-13)

## உடைமையில் ஹெரோய்ன்; ஒருவருக்கு விளக்கமறியல்

ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதான நாவற்குழி வாசியை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து, நாவற்குழிப் பகுதியில் வைத்து 37 மில்லிக்கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டு, அவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது. குறித்த வழக்கு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது சந்தேகநபரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ஐ-9)

# மீண்டுமொரு கொத்தணி உருவாகுவதற்கு வாய்ப்பு

## தொற்றுநோய்ப் பிரிவு எச்சரிக்கை



**கொழும்பு, ஏப். 9**

**நாட்டில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீண்டுமொரு கொரோனாக் கொத்தணி உருவாகக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது என்று தொற்று நோய்ப் பிரிவு எச்சரித்துள்ளது.**


இது தொடர்பில் சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளதாவது,

பொதுப்போக்குவரத்து, பொருள்கள் கொள்வனவு மற்றும் சுற்றுலா உள்ளிட்ட விடயங்களில், மக்கள் அடிப்படை சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளை நிச்சயம் பின்பற்ற வேண்டும்

தமிழ் - சிங்கள புத்தாண்டு அண்மித்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் நாட்டில் கொவிட் தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. எனினும் நாளாந்தம் சுமார் 100 தொற்றாளர்கள் இனங்காணப் படுகின்றனர். எனவே எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீண்டும் வைரஸ் பரவல் தீவிரமடையக்கூடிய அபாயம் காணப்படுகிறது.

எனவே தனிநபர் இடைவெளியைப் பேண வேண்டும். மக்கள் அதிக அளவில் ஒன்று கூடும் இடங்களில் பொறுப்புடன் செயற்பட வேண்டும். மேல் மாகாணத்தில் எதிர்வரும் 12ஆம் திகதி முதல் மேலதிக வகுப்புக்களை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் வழமையான மாணவர் தொகையில் 50 வீதமானோரை மாத்திரமே வகுப்புக்களுக்கு அனுமதிக்க வேண்டும்.

அதற்கு முன்னர் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களிடம் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும். புத்தாண்டின் பின்னர் பல்கலைக் கழகங்களையும் ஆரம்பிப்பதற்கான வாய்ப்புக்களும் உள்ளன - என்றார். (ப-4)



## முச்சக்கரவண்டி விபத்து: சாரதி மருத்துவமனையில்

வவுனியா, ஏப். 9

வவுனியா நூலக வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற முச்சக்கரவண்டி விபத்தில் சாரதி படுகாயமடைந்த நிலையில், வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நூலக வீதியூடாக வவுனியா நகர் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கரவண்டி சைவப்பிரகாச மகளிர் கல்லூரிக்கு முன்பாக வேகக் கட்டுப்பாட்டை இழந்து, வீதியைவிட்டு விலகி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் முச்சக்கரவண்டியின் சாரதியான முதியவர் முச்சக்கரவண்டியில் சிக்குண்ட நிலையில் மீட்கப்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இது தொடர்பில் வவுனியாப் போக்குவரத்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரு-18-110)



## குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம், ஏப். 9

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை கிறீன் பீல்ட் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை கிறீன்பீல்ட் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

## அரசுக்கு சவால்விடும் வர்த்தகரின் முயற்சி

கொழும்பு, ஏப். 9

அரசு ஆயிரம் ரூபா சலுகைப் பொதியை அறிமுகப்படுத்தியுள்ள நிலையில், அதற்குச் சவால் விடும் வகையில் வர்த்தகர் ஒருவர் அதைவிட அதிக அளவான பொருள்களுடன் ஆயிரம் ரூபாவுக்கும் குறைவான விலையில் சந்தையில் பொதியை விற்பனை செய்கின்றார்.

அரசின் முயற்சிக்கு சவால் விடும் வகையில் பண்டாரவளையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர், அரசின் ஆயிரம் ரூபா பொதியுள்ள பொருள்களை விட மேலும் சில பொருள்களை உள்ளடக்கி ஆயிரம் ரூபாவை விடக் குறைந்த விலைக்கு அந்தப் பொதியை வழங்கி வருகின்றார். மக்களிடத்தில் இது பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. (ஒ.இ)

## வவுனியா நகர் முழுவதும் விசேட பொலிஸ் பாதுகாப்பு



வவுனியா, ஏப். 9

எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு வவுனியா நகரின் பல்வேறு பகுதிகளில் பொலிஸார் விசேட பாதுகாப்புக் கடமையிலும், கண்காணிப்பிலும் ஈடுபட்டுள்ளனர்.

பண்டிகைக் காலமாக கருதப்படும் இந்த மாதம் 8ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரையான இக் காலப்பகுதியில் சமூக விரோதச் செயற்பாடுகளும், கொரோனத் தொற்றுக்கான ஏதுநிலையும் காணப்படுவதால், அவற்றைத் தவிர்க்கும் விதமாக பொலிஸார் இவ்வாறு கண்காணிப்பில் ஈடுபடவுள்ளனர். (ரு-18)



## பெண்களின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடல்

முல்லைத்தீவு, ஏப். 9

பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் முகமாக முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தினருக்கும், முல்லைத்தீவு மாவட்டச் செயலருக்கும் இடையிலான கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் வசிக்கும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சமூகத்தில் இனங்காணப்படும் சில பிரச்சினைகள் தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இதன்போது மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தால் மாவட்டச் செயலரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (ஐ-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘1977’ க்கு அழையுங்கள்

கொழும்பு, ஏப். 9

சித்திரைப் புத்தாண்டுக் காலத்தில் சந்தையில் நிலவும் மோசடிகள் தொடர்பில் 1977 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு 24 மணி நேரமும் முறைப்பாடு செய்யமுடியும் என்று நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் தகவல் பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'பண்டிகைக்காலத்தில் நுகர்வோர் அதிகளவு பொருள்களைக் கொள்வனவு செய்யும் போது மோசடிகளுக்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன. இதனால், இனிப்புப் பண்டங்கள், பலசரக்குப் பொருள்கள் மற்றும் மின்சார உபகரணங்கள் உள்ளிட்ட பொருள்கள் தொடர்பிலும் சேவைகள் தொடர்பிலும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது.

பொருள்கள் மற்றும் சேவை விலைப்பட்டியலை காட்சிப்படுத்தல், பொருள்கள் கொள்வனவு செய்யப்படும்போது பற்றுச் சீட்டு வழங்குதல் என்பவை கட்டாயம். இவற்றை மீறும் வர்த்தகர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும்' - என்றார். (ஓ.இ)

# மீண்டும் வெறிச்சோடியுள்ளது நெடுந்தூர பேருந்து நிலையம்



யாழ்ப்பாணம், ஏப். 9

யாழ்ப்பாண நகர் முடக்கப்பட்டிருந்தமையால் இலங்கை போக்குவரத்துச் சேவை பேருந்துகள் மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவைகள் என்பவை முற்றவெளியிலிருந்தும், புதிதாகத் திறக்கப்பட்ட நெடுந்தூரப் பேருந்து நிலையத்திலிருந்தும் இயங்கின.

நகரின் முடக்கம் நீக்கப்பட்டுள்ள நிலையில் மீளவும் நகரின் மத்தியிலிருந்து பேருந்துச் சேவைகள் இடம்பெறுவதனால், நெடுந்தூர பேருந்து நிலையம் வெறிச்சோடியுள்ளது.

யாழ்ப்பாண நகர வர்த்தகர்களுக்கு இரண்டாம் கட்ட பி.சி.ஆர். சோதனைகள் முடிவடைந்த பின்னர் தொற்றாளர்கள் இல்லாத வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டன. தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட 70 கடைகள் மூடப்பட்டுள்ளன.

அத்துடன் நகரப் பகுதியில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து நிலையமும் திறக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து தனியார் பேருந்துகளும் தமது முன்னைய சேவை நிலையத்திலிருந்து நேற்றையதினம் பயணத்தில் ஈடுபட்டன. (ஓ.20)


## பணியாளர்கள் தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல **புடைவை விற்பனை நிலையத்திற்கு** அனுபமுள்ள, பழக விரும்பும் (ஆண்/பெண்) புடைவை விற்பனையாளர்கள் தேவை.

மேலும் **கணினியில் சிட்டை பதிவினர்** (வயது 18-28) பெண்கள்.

**074 142 4358**


## தேர்தல் ஆணைக்குழு

வாக்களிப்பதற்கு தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருத்தல் கட்டாயத் தேவைப்பாடொன்றாகும்

தேருநர் இடாப்புக்கள் மீளாய்வு - 2020 பகுதியளவில் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்கள் மற்றும் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத பிரதேசங்களின் வாக்காளர்களை பதிவு செய்தல் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் சம்பந்தமான விசேட அறிவித்தல்

வட மாகாணத்தில் பகுதியளவில் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்கள் மற்றும் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத கீழ் குறிப்பிடப்படும் கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் 2019 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருந்த மற்றும் 2020 தேருநர் இடாப்பிலிருந்து நீக்கப்படும் நபர்களின் பெயர்ப் பட்டியல் அப் பிரதேசங்களின் கிராம அலுவலர் அலுவலகங்களில், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவின் www.elections.gov.lk இணையத்தளத்தில் 2021.04.16 ஆம் திகதி முதல் காட்சிப்படுத்தப் படும். 2020 ஆம் ஆண்டில் பதிவுக்காக பரிந்துரை செய்யப்படாத ஆனாலும் உயிர் வாழும் நபர்கள் 2021.04.27 ஆம் திகதிக்கு முன்னர் உரிய விண்ணப்பப் படிவத்தின் மூலமாக உரிய மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்கு அறியத்தரவும். இந்த விண்ணப்பப் படிவத்தை மேலே பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள காட்சிப்படுத்தப்படும் இடங்களில் பெற்றுக்கொள்ளுதல் அல்லது மற்றும் தேர்தல் ஆணைக் குழுவின் www.elections.gov.lk இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து பெற்றுக்கொள்ள முடியும்.

| மாவட்டத்தின் பெயர் | பிரதேச செயலாளர் பிரிவின் பெயர் | கிராம அலுவலர் பிரிவின் பெயர் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | தெல்லிப்பளை | J/226 நகுலேஸ்வரம், J/233 காங்கேசன்துறை மேற்கு, J/234 காங்கேசன்துறை மத்தி, J/235 காங்கேசன்துறை தெற்கு, J/238 கட்டுவான், J/240 தென்மயிலை, J/241 வருத்தலைவிலான், J/242 குரும்பசிட்டி, J/243 குரும்பசிட்டி கிழக்கு, J/244 வசாவிளான், கிழக்கு, J/245 வாசவிலான் மேற்கு, J/246 மயிலிட்டி வடக்கு, J/248 மயிலிட்டிதுறை தெற்கு, J/249 தையிட்டி வடக்கு, J/250 தையிட்டி மேற்கு, J/251 மைலிட்டிதுறை வடக்கு, J/252 பலாலி தெற்கு , J/253 பலாலி கிழக்கு, J/254 பலாலி வடக்கு, J/255 பலாலி வடமேல், J/256 பலாலி மேற்கு |
| கிளிநொச்சி | கண்டாவளை | KN 46 ஆனையிறவு |
| | பச்சிலைப்பள்ளி | KN 92 இத்தாவில், KN 93 முகமாலை, KN 94 வேம்பொடுகேணி |
| மன்னார் | முசலி | MN 153 முள்ளிக்குளம் |

www.elections.gov.lk எனும் தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்திலிருந்தும் குறித்த விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

தொலைபேசி இலக்கம்: **011-286 8441,42,43**
மின்னஞ்சல் : **info@elections.gov.lk**
இணையத்தளம் : **www.elections.gov.lk**

**தேர்தல் ஆணைக்குழு**
**சரண மாவத்தை, இராஜகிரிய.**
**2021.04.09**

**குறித்த மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்கள்.**

- **யாழ்ப்பாணம்** - 021- 222 2655
- **கிளிநொச்சி** - 021- 228 5664
- **மன்னார்** - 023- 222 2289

சரியான முறையில் பதிவு செய்துகொள்வதன் மூலம் வாக்களிக்க முடியுமென்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.


## வேலையாள்கள் தேவை

**கிளிநொச்சியில் உள்ள வர்த்தக நிறுவனம்** ஒன்றிற்கு கீழ் குறிப்பிட்ட பணியாளர் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும் **(ஆண்கள் மட்டும்) கணக்காளர் (கணினி அனுபவம் அவசியம்) கணினி இயக்குநர்** (கணினியில் போதிய அனுபவம் அவசியம்)

**077 772 2305**


## பொது அறிவித்தல்

கம்பனியின் பெயர் மாற்றம்

இவ் அறிவித்தல் 2007ஆம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 இற்கு அமைய வெளியிடப்பட்டுள்ளது. கம்பனியின் முன்னைய பெயர் 'அறலிய றெட் ஹொட்டேல்' (பிரைவட்) லிமிட்டட் கம்பனியின் புதிய பெயர் பீ.ஏ மொரொபரகஸ் (பிரைவட்) லிமிட்டட்.

நுவரெலியாவில் அமைந்துள்ள கம்பனிகள் பதிவு அலுவலகத்தில் 17.03.2021 ஆம் திகதி பீ.வீ. 98751 என்னும் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-19 கலீபா அப்துல் காதர் வீதி ஆதன இல 168 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் ஆதனப் பதிவேட்டில் M.S.M குசேன் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் தொடர்பில் பிரசித்த நொத்தாரிசு J.S.A. மதுரநாயகம் முகதாவில் 291ம் இலக்க 26.09.2016ம் திகதியிட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் அப்துல் காதர் முஹம்மது பதுர்தீன் (453172228V) உம் பெண் முஹம்மது பதுர்தீன் அத்தாறுன்னிஸா (555263139V) உம் ஆகியவர்கள் குறித்த ஆதனம் தமக்கு உரித்தானது என வெளிப்படுத்தியுள்ளார்.

பின்னர் யாழ்ப்பாணம் கலீபா அப்துல் காதர் வீதி இல 168ச் சேர்ந்த அப்துல் காதர் முஹம்மது பதுர்தீன் உம் பெண் முஹம்மது பதுர்தீன் அத்தாறுன்னிஸ்வும் அறுதியாக பிரசித்த நொத்தாரிசு M.S.F.Roshana முகதாவில் வரையப்பட்ட 766ம் இலக்க 26.11.2019ம் திகதியிட்ட அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனத்தை மொகமட் உசனார் மொஹமட் தாஹிர்க்கு வழங்கியுள்ளார்.

பின்னர் அதேமுகவரியைச்சேர்ந்த முஹம்மது உசனார் முஹம்மது தாஹிர் மற்றும் பெண் ஜுனைத்தா பிரசித்த நொத்தாரிசு தி.கணேபன் முகதாவில் 1798ம் இலக்க 30.09.2020த் திகதிய அறுதி உறுதி மூலம் இல.08 அசனாலெப்பை ஒழுங்கை யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த றஜப் அஸ்கர் என்பவருக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

**ஆதன விபரம்:-** யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை பிரதேசசெயலகம் யாழ்ப்பாணம் கிராமசேவையாளர் பிரிவு J/86 யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட "பிச்சைக்குளம் கரை" பதினேமு தசம் எட்டு ஐந்து குளிகள் கொண்ட ஆதனமும் இக் காணிக்குள் இருக்கும் கிணறு பயிர்வகைகள் உள்ளிட்டவையும் இதன் எல்லைகள்.

கிழக்கு :- K.I.M பெண் அனீஷாவின் ஆதனமும் ஆறுமுகம் மகேந்திரராசாவின் ஆதனமும்
வடக்கு :- கலீபா அப்துல் காதர் வீதி
மேற்கு :- முகமட் றுஷான் பாத்திமா ரீசானாவின் ஆதனம்.
தெற்கு :- ஆறுமுகமும் மகேந்திரராஜாவின் ஆதனம்.

இதடங்கலும் இதற்கு சேர்ந்தவைகளும்

தற்போது றஜப் அஸ்கர் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது றஜப் அஸ்கர் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்**
**மாநகரசபை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரி நௌபர்

# சரத் வீரசேகரவின் கருத்தை ஆராயலாம் என்கிறது ராவய

**கொழும்பு, ஏப். 9**

**ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரி நௌபர் மௌலவி என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்த கருத்தை பல தரப்பும் சவாலுக்கு உட்படுத்தி வரும் நிலையில், சிங்கள ராவய அமைப்பு சரத் வீரசேகரவின் தகவலை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளது.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த சிங்கள ராவய அமைப்பின் பொதுச் செயலர் மாகல்கந்தே சுதந்த தேரர் இது தொடர்பில் தெரிவித்த தாவது:

தேசியப் பாதுகாப்புத் தொடர்பில் அக்கறை கொண்ட பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்த கருத்தை உதாசீனம் செய்ய முடியாது. ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரி நௌபர் மௌலவி என்று அவர் கூறியமையை நாம் ஆராய்ந்து பார்க்கலாம். அவர் இந்த விடயத்தில் பொய் சொல்ல வேண்டிய தேவை கிடையாது. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியினருக்கும், ஆளும் கட்சியினருக்கும் இது தொடர்பில் போதிய தெளிவில்லை. அவர்கள் விரிவாக ஆராய்ந்து அறிவுபூர்வமாகத் தீர்மானம் எதனையும் எடுக்கும் நிலைமையில் இல்லை. சரத் வீரசேகர வெளியிட்ட தகவலை முழுமையாகப் புறக்கணிக்க முடியாது. நௌபர் மௌலவி தொடர்பில் தகவல் கிடைத்தால் நிச்சயம் நாம் பகிரங்கப் படுத்துவோம் என்றார். (ஒ.இ)

# மறைந்த சிவஞானசோதியுடைய சேவைகள் மிகவும் மகத்தானவை

### நல்லூர் பிரதேசசபை உறுப்பினர் இரங்கல்

யாழ்ப்பாணம், ஏப்.9

மீள்குடியேற்ற மற்றும் வடக்கு அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் செயலாளர் மறைந்த வி.சிவஞானசோதி சிறந்த கல்விமான். அவர் தான் பெற்ற கல்வியை தனது சமூகத்துக்காக அர்ப்பணித்து மகத்தான சேவைகள் பல ஆற்றினார் என்று நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் கு.மதுசுதன் தெரிவித்தார்.

அவர் அனுப்பி வைத்துள்ள இரங்கல் செய்தியில் மேலும் உள்ளதாவது:

பல்வேறு அமைச்சுக்களின் செயலாளராக இருந்த காலப்பகுதிகளில் தமிழ் பிராந்தியங்களில் ஒப்பற்ற சேவைகளை புரிந்தவர். குறிப்பாக வடக்கு மாகாண மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான கருத்தரங்குகளை வருடம் தோறும் இலவசமாக நடத்தியதுடன், கடந்த கால தொகுப்புக்களையும் பல்லாயிர கணக்கான மாணவர்களுக்கு இலவசமாகவே வழங்கியிருந்தார். அவரது இழப்பு தமிழ் நிர்வாகத்துறைக்கு கல்வித் துறைக்கும் பேரிழப்பாகும் - என்றுள்ளது. (ஐ)

# கொல்லங்கிராய் வீதிக்கு மேலும் ரூபா 4 மில்லியன்

சாவகச்சேரி நகர சபையின் கீழ்வரும் கொல்லங்கிராய் வீதியின் சீரமைப்புக்கு மேலும் நான்கு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

நகர சபையின் வேண்டுகோளின் பிரகாரம் வேர்ள்ட் விஷன் லங்கா நிறுவனத்தின் பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் ஏற்கனவே நான்கு மில்லியன் ரூபா வழங்கப்பட்டு ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை செப்பனிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் நிறுவனத்தால் வழங்கப்பட்ட மேலும் நான்கு மில்லியன் ரூபா செலவில் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரையுள்ள கொல்லங்கிராய் இந்து மயானம் வரையான வீதி சீரமைக்கப்படவுள்ளது.

சாவகச்சேரி நகரசபையின் மாதாந்த அமர்வு நேற்று நடைபெற்றபோது இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று நகரசபைத் தவிசாளர் தெரிவித்தார். இதேவேளை கொல்லங்கிராய் மயானம் தொடக்கம் தண்டவாளம் வரை மேலும் 200 மீற்றர் தூரம் கொண்ட வீதி நீண்டகாலமாக சீரமைக்கப்படாமல் குண்டும்குழியுமாக காணப்படுகின்றது. அதனையும் சீரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-9)

# புத்தாண்டுச் சந்தை

வேலணை, ஏப். 9

புத்தாண்டை முன்னிட்டு வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் புதுவருட சந்தையை சங்க வளாகத்தில் ஆரம்பித்துள்ளனர்.

உள்ளூர் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் முகமாக கடந்த ஐந்தாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட குறித்த சந்தை இம் மாதம் 13 ஆம் திகதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பனைசார் உற்பத்திப் பொருள்கள், குளிர்பான வகைகள், மரக்கறிகள், பழவகைகள் மற்றும் கைத்தறிசார் உற்பத்திப் பொருள்கள் என்பவை விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (ஐ-9)

# பெறுகை அறிவித்தல்.

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத் திட்டம் (PSDG) -2021

01. **தலைவர், உள்ளூராட்சிமன்ற** பெறுகைக்குழு, **வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர், வடமாகாணம்** தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்,** (தொலைபேசி இலக்கங்கள்.0212058982, 0212058983 பக்ஸ் இல 0212058866 e.mail – secveps@yahoo.com இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் **09.04.2021**ம் திகதியிலிருந்து **23.04.2021** ம்திகதி வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி, புத்தூர்** எனும் இடத்திலிருந்து **09.04.2021ம்** திகதியிலிருந்து 23.04.2021ம் திகதி வரை காலை **09.00** மணிக்கும் **14.00** மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**2000/- (வரி நீங்கலாக)**செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி, புத்தூர்,** எனும் முகவரிக்கு **27.04.2021** ம் திகதி மாலை **14.00** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர், அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப் பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்துமூன்று – 25.06.2021) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
10. கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் எமது அலுவலக மாநாட்டு மண்டபத்தில் **16.04.2021** ஆம் திகதி பி.ப **14.00** மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தங்களது சொந்த செலவில் கலந்துகொள்ளமுடியும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை Rs.Mn(Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (Rs) | செல்லுபடி யாகும் காலம் |
| NP/14/41(13) /PSDG/1/2021 | சோலர் வீதி விளக்குகள் கொள்வனவு செய்தல் | 0.845 | 01 மாதம் | அங்கீகரிக்கப் பட்ட நிறுவனம் | 8500.00 | 23.07.2021 |

தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,
புத்தூர்.
08.04.2021

# ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## அம்பலவாணர் கந்தையா பாலசிங்கம்

(ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்)

**அன்னையின் மடியில் சரண்**
**16.10.1925**

**கதிர்காம சுவாமி திருவடியில் சரண்**
**09.04.2012**

திதி: அபர பக்க திருத்தியை (31.03.2021)



**மறக்க இயலா மறைவு**


ஆண்டுகள் ஒன்பது ஓடினாலும்
ஆறுதல் வார்த்தைகள் கேட்டாலும்
அந்த நாளை என்றும் நினைத்தாலும்
அருவியான கண்ணீரைத்
- துடைத்தாலும்
அகத்தே வெறுமை மட்டும்
எங்களுக்கு ஆறாமல்
-வலிக்கின்றதே ஐயா

உங்கள் மனைவி மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
'துவாரகா'
கதிர்கா சுவாமி கோவிலடி,
காரைநகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஜித்தின் முகக்கவசம், விஜய்யின் சைக்கிள் சவாரி

# வைரலாகும் கருத்துக்கள்



தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் இந்தியாவில் கடந்த 6ஆம் திகதி நடைபெற்றது. தேர்தலில் சினிமா பிரபலங்கள் வாக்களிக்கச் சென்றமை தொடர்பில் சமூகவலைத் தளங்களில் தொடங்கிய வறுத்தெடுப்புக்கள் இன்னமும் ஓய்ந்தபாடில்லை.

நடிகர் விஜய் 'சைக்கிளில்' சென்று வாக்களித்திருந்தார். அவர் சைக்கிளில் சென்றமைக்கான காரணம், சைக்கிள் நிறம் என்பவை தொடர்பில் சமூகவலைத் தளங்களில் வைரலாகி வருகின்றது. அதேபோன்று நடிகர் அஜித் வழக்கம்போல் வாக்களித்தார். அவர் 'செல்பி' எடுத்த ரசிகரின் தொலைபேசியை பறித்தமை மற்றும் அவரது முகக்கவசம் தொடர்பிலும் சமூகவலைத் தளங்களில் கிண்டல்கள் தொடர்கின்றன.



# 'குக் வித் கோமாளி' ?

## சீஸன் 3 வெற்றியாளர் யார்

தமிழகத்தின் விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் 'குக் வித் கோமாளி' நிகழ்ச்சியை முடிக்க வேண்டாம் எனப் பலரும் கோரிக்கை விடுத்திருந்தனர். ஆனால் கடந்த திங்கட்கிழமை இரண்;டாவது 'சீஸனின்' படப்பிடிப்பு நடந்து முடிந்துள்ளது. வெற்றியாளர் கனி, சகிலா இரண்டாம் இடம், அஸ்வின் மூன்றாம் இடம் எனத் தகவல்கள் கசிகின்றன.

நிகழ்ச்சியின் நடுவர் தாமுவை இந்திய ஊடகமான ஆனந்த விகடன் சந்தித்தது.


'இறுதி நாள் படப்பிடிப்பு முடிந்தும் மூன்று மணித்தியாலங்களாக நாங்கள் யாரும் செல்லவில்லை. எல்லோரும் அழுதுவிட்டோம். அந்தளவுக்கு இந்த 'சீஸன்' முடிந்தது கஷ்டமாக இருந்தது. மக்களுக்கு மட்டுமல்ல பங்கேற்ற எங்களுக்கும் இது 'ஜாலியாக' கலகலப்பாக இருந்தது' என்று குறிப்பிட்டார் தாமு.

முதலாவது 'சீஸனை' விட இது களைகட்டியமைக்கும் காரணத்தைச் சொன்னார்.

'இந்த 'சீஸனில்' கலகலப்புக்குப் பஞ்சம் இல்லை. முடிவு சொல்லும்போது யாரையும் நோகடிக்காமல் சொன்னோம். அந்த நேரத்தில் மாத்திரம்தான் நடுவர்களாக இருந்தோம். ஏனைய நேரங்களில் நாங்களும் கோமாளிகள் போலவே இருந்தோம். மக்களும் அதைத்தான் ரசித்தார்கள்.

வெற்றியாளர்கள் தொடர்பில் அரசல்புரசாலகப் பேசப்படுவது தொடர்பில் கேட்டபோது, பொறுத்திருந்து பாருங்கள். 5 பேரும் மிகத் திறமைசாலிகள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தனித் திறமை இருக்கு என்று மாத்திரம் கூறி பதிலை முடித்துக் கொண்டார்.

மக்களை மகிழ்விப்பது மாத்திரமே இலக்கு. அதானால் போட்டியாளர்களும் நாங்களும் எந்தவித ஈகோவும் இல்லாமல் நடந்து கொண்டோம். கலகலப்பாக இருந்தோம். அதுவே வெற்றிக்கு காரணம் என்கிறார் தாமு. நிச்சயமாக மூன்றாவது 'சீஸன்' நடக்கும் என்பதை உறுதிப்படுத்திய தாமு அதில் பங்கேற்பவர்கள் யார் என்பதை அறிய தானும் ஆவலாக இருக்கிறேன் எனக் கூறினார்.



# வஜ்ராசனம்

## (கணுக்காலின் மீது அமர்ந்த நிலை)

வஜ்ஜிரம் என்றால் வைரம்ரூபவ் பலம்ரூபவ் சக்தி ஆகியவற்றைக் குறிக்கும். இந்த ஆசனத்தால் கணுக்கால்களில் ஓடும் வஜ்ரநாடி ஊக்கப்படுத்தப்பட்டு பலப்படும்.

**செய்(படி)முறைகள்:**

1. நேராக நிமிர்ந்து உட்கார்ந்து இரு கால்களையும் நேராக நீட்டவும். பாதங்களிரண்டும் இணைந்திருக்க வேண்டும்.
2. உள்ளங்கைகளை புட்டப்பகுதியின் இரு பக்கங்களும் தரையில் வைக்கவும்.
3. வலக்கையின் உதவியால் வலக்காலை மடக்கி வலது புட்டத்துக்கு கீழ் வைக்கவும்.
4. இடது காலை இடக்கையின் உதவியால் மடக்கி இடது புட்டத்துக்குக்கீழ் வைக்கவும். முழங்கால்களிரண்டும் இணைந்திருக்கத்தக்கவாறு உள்ளங்கைகளை தொடைகளின் மீது வைக்கவும்.
5. உடலின் முழுப்பாரமும் குதிக்கால்களின் மீது இருக்குமாறு நிமிர்ந்து இருந்தபடி கண்களை மூடி ஆழமாக சுவாசிக்கவும். - உச்ச நிலை
6. பின்னர் வலதுகாலை எடுத்து நேராக நீட்டி அதேபோல் இடது காலையும் எடுத்து ஆரம்ப நிலையில் வைக்கவும்.

**வாரம் ஒரு ஆசனம்**

**பலன்கள் :** காலிலுள்ள எல்லா மூட்டுக்கள் மற்றும் தசைகளை தளர்த்துகிறது. வயிற்றுப்புற பகுதிக்கு அதிக இரத்த ஓட்டம் கிடைக்கிறது. உடல் பலமடைகின்றது. மனம் அமைதியடைகின்றது. இரப்பை குடல் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு நல்லது. இடுப்பு வலி, வாயுப்பிரச்சினை, சமிபாட்டுப்பிரச்சினை இரத்த அழுத்தம், மூல வியாதி மலச்சிக்கல் முதலியவற்றுக்குச் சிறந்த ஆசனம். உடல் பலமாகி மன வலிமை மன உறுதி, உண்டாகும். பாதங்கள், கணுக்கால்கள், இடுப்பு, தொடைகள் அவைசார்ந்த தசைகள் எலும்புகள் என்பவை பலம் பெறுகின்றன.

**குறிப்பு :** தியானம் மற்றும் பிராணாயாமப் பயிற்சிகளுக்கு மிகவும் பொருத்தமான ஆசனமாகும். இவ்வாசனத்தில் எவ்வளவு நேரமானாலும் இருக்கலாம். எந்த நேரமும் இவ்வாசனத்தைச் செய்யலாம். இலகுவான ஆசனம். உடல் உபாதைகள் உள்ளவர்கள் தகுந்த குருவின் ஆலோசனையுடனேயே செய்தல் வேண்டும்.

**ஆக்கம்: ஸ்ரீ. நதிபரன்**
(யோகா போதனாசிரியர்)



# சரத்குமார், ராதிகாவுக்கு ஓராண்டுச் சிறை!

காசோலை மோசடி வழக்கில் சமத்துவ மக்கள் கட்சியின் தலைவரும், நடிகருமான சரத்குமார் மற்றும் அவரின் மனைவியும் சின்னத்திரை நடிகையுமான ராதிகாவுக்கு ஓராண்டு சிறைத் தண்டனை விதித்தது சென்னை சிறப்பு நீதிமன்றம். 'ரேடியன்ஸ் நிறுவனம்' தொடர்ந்த வழக்கில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இதேவேளை நடிகை ராதிகா கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். சிகிச்சை முடிவடைந்ததும் நீதிமன்றில் அவர் முன்னிலையாகுவார் என்று அவரது சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

# இன்றைய நாள்





**மேடம்:** மகிழ்ச்சி நிறைந்த நாள். நண்பர் ஒருவர் மூலம் நற்செய்தி உண்டு. பிறரிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிப்பீர்கள். வாழ்க்கைத்துணை வழி உறவினர்களால் நன்மை உண்டாகும்



**இடபம்:** பணியாளர்களுக்கு பாராட்டு காரணமாக பெருமிதம் கூடும். திடீர் சலிப்பு வந்து இன்றே சரியாகிவிடும். சிறு பயணம் உண்டு. பிள்ளைகளால் நீண்ட நாளைய கவலை ஒன்று தீரும்.



**மிதுனம்:** நீண்ட நாள் ஆசை நிறைவேறும். மகிழ்ச்சி அதிகரிக்கும். அதிகாரிகளின் கருணை கிடைக்கும். சிறிய சாதனை செய்வீர்கள். மனதில் சிறியதொரு திருப்தி வரும். நட்பு வட்டம் விரியும்.



**கடகம்:** முயற்சியில் சிறிய தடை ஏற்பட்டு நீங்கும். நிம்மதி உண்டு. உங்களின் தவறான செயல் உங்களுக்கே தீங்கு தராமல் கவனம் தேவை.



**சிம்மம்:** சமாளிக்கும்படியான சிறிய செலவு ஒன்று ஏற்படக்கூடும். அலுவலகப் பணியை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். மனதுக்கு பிரியமானவருடன் சந்தோஷ உரையாடல் உண்டு.



**கன்னி:** மதியத்துக்கு மேல் பேச்சில் கவனமாக இருப்பது நல்லது. இன்று வரும் செய்தி [illegible] தீர்க்கும். பணியிடத்தில் முன்பிருந்த [illegible]



**துலாம்:** முயற்சியினால் குடும்ப ஒற்றுமை முன்பைவிட மேம்படும். உங்களின் விருப்பத்தை வெளியிட இன்று உகந்த நாள் அல்ல. பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.



**விருச்சிகம் :** வீட்டில் உள்ள ஒருவருக்குத் திருமண முயற்சி தொடங்கும். பிள்ளைகள், பேரன், பேத்தி மூலம் செலவுகள் உண்டாகும். எப்போதோ எடுத்த முயற்சி இன்று எதிர்பார்த்த



**தனுசு:** தடைகள் வரும். எதையும் முயன்றே முடிக்க முடியும். மற்றவர்களை பற்றி விமர்சனம் செய்வதைத் தவிர்க்கவும். சிறுசிறு தாமதங்கள் பற்றிக் கவலை வேண்டாம்.



**மகரம்:** சிறு சிறு சங்கடங்களுக்கு ஆளாகி மீளுவீர்கள். நடுநிலை காரணமாக நல்ல பெயர் எடுப்பீர்கள். மற்றவர் செயலில் தலையிட வேண்டாம். உழைப்பை அதிகரியுங்கள்.



**கும்பம்:** கவர்ச்சி அம்சம் அதிகரிக்கும். பேச்சுக்கு மதிப்பிருக்கும். பல காலமாக அனுபவித்த வீண் பழியிலிருந்து மீள்வீர்கள். அலட்சியப்போக்கு வேண்டாம். ஏற்ற இறக்கங்கள் உண்டு.



**மீனம் :** தடைபட்ட சுபவிஷயம் உங்கள் முயற்சியால் கூடிவரும். பதவி உயர்வு வரும். மற்றவர் பிரச்னையைத் தீர்ப்பீர்கள். கலகலப்பான நாள். ஒரே சமயத்தில் பல வேலைகள் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் கம்பனிக்கு
**மேசன், கூலியாட்கள் தேவை.**
077 216 7459, 075 996 9173

## கண்ணீர் அஞ்சலி

எமது வகுப்பு நண்பன் **ஜெ.சங்கீதனின்** தாயார்

**திருமதி**
**ஜெயரூபா ஜெஜராஜன்**

அவர்கள் 08.04.2021 அன்று இறைபத மடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருறும் நண்பனுக்கும். குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வகுப்பு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள்,**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.**


# தொற்றாளர்கள் குறைவதால் சோதனைகளும் குறைகின்றன

**ஊர்க்கோழிக்குஞ்சு விற்பனைக்கு**

3 கிழமையான
ஊர்க்கோழிக்குஞ்சு விற்பனைக்கு.
கழுத்துவெட்டியும் உண்டு விலை-160
தொடர்பிற்கு: 077 477 5603

**வேலையாள் தேவை**

கச்சேரி நல்லூர் வீதியில்
அமைந்துள்ள பல்பொருள்
வாணிபத்திற்கு
பெண் வேலையாள் தேவை
வயது எல்லை: 18-25
077 836 8926,077 404 8772



கொழும்பு, ஏப். 9
இலங்கையில் தற்போது நாளொன்றுக்கு 200 கொரோ னாத் தொற்றாளர்கள் வரையிலேயே அடையாளம் காணப்படு கின்றனர் என்று இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோ புள்ளே தெரி வித்தார்.
'தொற்றாளர்கள் குறைந்து வருவதால் அதற்கு இணையாக மேற்கொள்ளப்ப டும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண் ணிக்கையும் குறைக்கப்படுகின்றன.
பரிசோதனைகளைக் குறைப்பதால் நோயாளர்கள் எண்ணிக்கை குறைய வில்லை' எனவும் அவர் கூறி னார். (ஒ.இ)

## கேள்வி அறிவித்தல்
## சபை நிதி - 2021
## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

01. தலைவர்,பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காகக் கோருப்படுகின்றது.
02. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 03/2020(i)ஆம் இலக்க 11.01.2021ஆந் திகதிய, 04/2016(ii)ஆம் இலக்க 08.05.2019ஆந் திகதிய மற்றும் 04/2016(iii)ஆம் இலக்க 18.02.2021ஆந் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வடமாகாணத்தை சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
03. இல 1-11 வரையான கேள்விகளுக்கு கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வீதி மற்றும் கட்டடம் புனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். இல 12-13 வரையான கேள்விகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனதாரராகக் காணப்பட வேண்டும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் (தொலைபேசி 0212240017) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 09.04.2021 தொடக்கம் 22.04..2021ஆம் திகதி வரை வேலைநாட்களில் மு.ப 9.00 மணிமுதல் 15.00 மணிவரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம் எனும் இடத்திலிருந்து **09.04.2021** திகதியிலிருந்து **22.04.2021**ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**3000/- (வரிநீங்கலாக)**,id செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
07. பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து தனித்தனியாக இரு உறைகளில் இட்டு **23.04.2021**ம் திகதி மு.ப **9.30** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்வி நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.
09. கோரப்பட்ட வேலைகளில் இல 01,02 கேள்வி செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து கேள்விக்கு 63(அறுபத்து மூன்று – 25.06.2021) நாட்களாகும். இல 03 – 13 வரையான கேள்விகளுக்கு கேள்வி செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து **49(நாற்பத்தொன்பது – 11.06.2021)** நாட்களாகும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்ட கேள்விக்குட்பட்டவாறு அமையும்.

| தொ. இல | வேலைவிபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டு தொகை ரூபாயில் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லு படி யாகும் காலம் |
| 1 | கேணியடி 1ம் குறுக்கு வீதி புனரமைப்பு – குப்பிளான், வாலி கோவில் வீதி – ஈவினை, இம்புலன் வீதி மிகுதி வேலை - ஏழாலை NP/14/41(15)/02/05/CF/2021/01 | 2.531 | 90 நாட்கள் | C8 & C7 (வீதி) | 25,500.00 | 23.07.2021 |
| 2 | மட்டக்கச்சி 1ம் குறுக்கு வீதி, வில்வகுட்டையன் 3ம் வீதி – உடுவில், இணுவில் மானிப்பாய் 4ம், 5ம், 6ம் ஒழுங்கை - இணுவில் NP/14/41(15)/02/05/CF/2021/02 | 2.017 | 90 நாட்கள் | C8 & C7 (வீதி) | 20,500.00 | 23.07.2021 |
| 3 | கலேட்டி வீதி (கலாநிதி குறுக்கு), தம்புவத்தை ஞான வைரவர் ஆலய வீதியும் உப ஒழுங்கையும், சைவமகாஜனா 4ம் குறுக்கு வீதி -ஏழாலை. NP/14/41(15)/02/05/CF/2021/03 | 1.626 | 60 நாட்கள் | C9 & C8 (வீதி) | 16,500.00 | 09.07.2021 |
| 4 | கணக்கர் வளவு வீதி – கந்தரோடை NP/14/41(15)/02/05/CF/2021/04 | 0.789 | 60 நாட்கள் | C9 & C8 (வீதி) | 8,000.00 | 09.07.2021 |
| 5 | துல்மினிய தோட்ட 2ம் ஒழுங்கை – சங்குவேலி NP/14/41(15)/02/05/CF/2021/05 | 1.222 | 60 நாட்கள் | C9 & C8 (வீதி) | 12,500.00 | 09.07.2021 |
| 6 | கெம்சன் வீதி - உடுவில் வடமத்தி NP/14/41(15)/02/05/CF/2021/06 | 0.635 | 60 நாட்கள் | C9 & C8 (வீதி) | 6,500.00 | 09.07.2021 |
| 7 | முத்தமிழ்மன்ற முன் வீதி – சுன்னாகம் நகர் தெற்கு சபாபதிப்பிள்ளை 6ம் ஒழுங்கை (குவாட்டர்ஸ் ஒழுங்கை) - இணுவில் வட கிழக்கு NP/14/41(15)/02/05/CF/2021/07 | 1.038 | 60 நாட்கள் | C9 & C8 (வீதி) | 10,500.00 | 09.07.2021 |
| 8 | நந்தாவில் குறுக்கு வீதி – தாவடி NP/14/41(15)/02/05/CF/2021/08 | 1.729 | 60 நாட்கள் | C9 & C8 (வீதி) | 17,500.00 | 09.07.2021 |
| 9 | பத்திரகாளி கோவில் வீதி மிகுதி வேலை – தாவடி NP/14/41(15)/02/05/CF/2021/09 | 1.312 | 60 நாட்கள் | C9 & C8 (வீதி) | 13,500.00 | 09.07.2021 |
| 10 | புகையிரத நிலைய ஒழுங்கை – சுன்னாகம் கிழக்கு NP/14/41(15)/02/05/CF/2021/10 | 0.787 | 60 நாட்கள் | C9 & C8 (வீதி) | 8,000.00 | 09.07.2021 |
| 11 | ஐயனார் கோவில் வீதி 1ம் குறுக்கு ஒழுங்கை– சுன்னாகம் NP/14/41(15)/02/05/CF/2021/11 | 0.786 | 60 நாட்கள் | C9 & C8 (வீதி) | 19,000.00 | 09.07.2021 |
| 12 | வீதி மின் விளக்கு கொள்வனவு NP/14/41(15)/03/05/Street light/2021/01 50W LED – 202 Nos | 1.874 | 60 நாட்கள் | அங்கீகரிக்கப் பட்ட நிறுவனம் | 19,000.00 | 09.07.2021 |
| 13 | உழவு இயந்திர இழுவைப்பெட்டி கொள்வனவு NP/14/41(15)/03/05/Tractor Tailor/2021/01 | 0.800 | 60 நாட்கள் | அங்கீகரிக்கப் பட்ட நிறுவனம் | 8000.00 | 09.07.2021 |

கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் 19.04.2021ம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.

க.தர்ஷன்,
தவிசாளர்
பிரதேசசபை பெறுகைக்குழு
வலிகாமம் தெற்குபிரதேசசபை
சுன்னாகம்.

09.04.2021

## போலி நாணயத்தாளுடன் ஒருவர் கைதானார்

கொழும்பு, ஏப்.9
போலி நாணயத்தாள்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊட கப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.
பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவ லுக்கமைய ருவன்வெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோணகல்தெனிய பகு தியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவரிடமி ருந்து 1000 ரூபா போலி நாணயத்தாள் கள் இரண்டு கைப்பற்றப்பட்டுள்ளன. பண்டிகைக் காலத்தில் இவ்வாறான மோசடிகள் இடம்பெற வாய்ப்புக்கள் உள்ளதால் மக்கள் மிகவும் அவதா னத்துடன் செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

## பிக்கு உட்பட இருவர் கைது

கொழும்பு, ஏப். 9
பொலிஸாரின் வாகனத்தை சேதப்ப டுத்திய குற்றச்சாட்டில் பிக்கு உள்ளிட்ட இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள் ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சா ளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.
கொழும்பு கோட்டைப் பகுதியில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸாரின் வாகனத்துக்கு இவர் கள் சேதம் விளைவித்தனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள் ளது. (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரவாரமற்ற பக்தியின் பெருமை

■ மதுரகவி காரை எம்.பி அருளானந்தம்



இறைவனது அருளைப் பெறுவதற்கு ஆத்மார்த்தமான பக்தி மட்டுமே போது மானது. ஆரவார ஆடம்பர வழிபாடுகள் தேவையற்றது என்பதை விளக்கும் வகையில் பத்ம புராணத்தில் உள்ள ஒரு கதை காணப்படுகிறது.

காஞ்சி மாநகரத்தை ஆண்ட ஒரு மன்னன் சிறந்த விஷ்ணு பக்தர் ஸ்ரீ மகா விஷ்ணுவின் திருவுருவமே அலாதியான அழகு கொண்டது. அத்தகைய சுந்தரக் கடவுளுக்கு மேலும் பல வயைான ஆடை- ஆபரணங்கள் அணிவித்து மணம் வீசும் மலர் மாலைகள் சூட்டி அழகு பார்த்து ஆராதித்து வந்தான் அவன். அதுமட்டுமல்லாமல் திரு பாற்கடலில் பள்ளி கொண்ட ஸ்ரீமந் நாராயணனின் திருவுருவ விக்கிரகம் ஒன்றைச் செய்வித்து அதற்கு நாள்தோறும் நாலா வித அலங்காரம் செய்தும் சுவைமிக்க பண்டங் களையும் பழங்களையும் நிவேதனம் செய்தும் வழிபட்டு வந்தான். அவனது மனதில் தன்னைப்போல் சிறப்பாக வழிபாடு செய்வதற்கு எவராலும் முடியாது என்ற இறுமாப்பும் தோன்றியது. இதனால் அவன் மற்றவர்களை செருக்குடனே பார்த்தான். ஒருநாள் அரசன் வெளியில் சென்று திரும்பும் வழியில் ஒரு பக்தர் விஷ்ணு விக்கிரகத்துக்கு துளசி தளங்களால் அர்ச்சனை செய்வதைப் பார்த்தான்.

தான் பலவகையான அலங்காரங்கள் செய்து வழிபடும் பரந்தாமனைப் பரதேசிக் கோலத்தில் வைத்திருக்கும் அந்த எளிய பக்தரைத் தன்னருகே அழைத்த அரசன் "நீ நாயகனை இப்படிப் பரதேசிக் கோலத்தில் வைத்திருக்கிறாயே. அங்கே வந்து பார் விஷ்ணுவின் திருவுருவை நான் எப்படி எல்லாம் அலங்கரித்து வழிபாடு செய்கிறேன் என்பதைப் பார். ஆனால் நீ வெறும் துள்சி மாலை மட்டும் சாத்தி வைத்திருக்கிறாயே என்றான். தனது செருக்கினால் வெளிப்பட்ட வார்த்தைகள் அந்த ஏழை பக்தரின் மனதைப் புணபடுத்திவிட்டது என்பதை அவன் அறியவில்லை.

நாடாளும் அவனுக்கும், பரம ஏழையான அந்த பக்தருக்கும் உள்ள வித்தியாசத்தைக் கூட அவன் உணரவில்லை.

ஆனால் பகவானிடம் பக்தி செலுத்துவதை மட்டுமே பிறவிப் பயனாகக் கருதிய அந்த பரம பக்தர், "ஐயா தாங்கள் நாடாளும் மன்னர், நானோ தங்கள் நாட்டின் ஒரு சாதாரண பிரஜை, அப்படியிருக்க என்னால் எப்படி தங்களைப் போல் ஆடம்பரமான பூஜை வழிபாடுகள் செய்ய முடியும்? ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். பகவானை வழிபடுவதற்கு இதயத்தில் பக்தி மட்டுமே நிரம்பி வழிந்தால் போதும். பரிமளமான பக்தி மலரை பகவானுக்கு சமர்ப்பிப்பதை தவிர சிறந்த வழிபாடு ஏதுமில்லை.

இறைவனை செல்வத்தாலும் செல்வாக்காலும் அளக்க முடியாது. ஆனால் ஆத்மார்த்தமான பக்தியால் ஆண்டவனை அடையலாம். இது உறுதி என்றார். பிறகு அவர் தனது தேனினுமினிய குரலில் விஷ்ணு தோத்திரங்களைப் பாடியபடி இறைவனை வழிபடுவதில் முனைந்துவிட்டார்.

இதைக் கேட்ட அரசன் கோபமும் கர்வமும் தொனிக்கும் குரலில், "அந்தணனே! நம் இருவரின் பக்தியில் எது சிறந்தது என்பதைப் பார்த்துவிடலாம். நம்மில் யாருக்கு இறைவன் முதலில் தரிசனம் கொடுக்கிறாரோ அவரது பக்தியே சிறந்தது என்று சொல்லிவிட்டு அரண்மனைக்குத் திரும்பினார். அரண்மனை சென்ற அரசன் மகரிஷி ஒருவரை வரவழைத்து பகவானைத் தரிசிப்பதற்கு மிகுந்த பொருட் செலவில் நகரை அலங்கரித்து ஒரு வேள்விக்கு ஏற்பாடு செய்தான். அந்தணர்களின் வேதமுழக்கங்களும் யாகத்தின் போது அளிக்கப்படும் தானதர்மங்களும் மக்களை காஞ்சியை நோக்கி வரச் செய்தன. அனைத்து மக்களும் அரசனின் சிறப்புமிக்க பக்தியைப் பாராட்டினர்.

ஏழை அந்தணரோ வழக்கம் போல விரதம், உபவாசம் என்று பகவானை ஆராதித்து வந்தாலும் சேஷத்திர சந்நியாசம் என்ற ஒரு வகைத் துறவை மேற்கொண்டு காஞ்சியை விட்டு நீங்கி அனந்தசயன தீர்த்தம் என்னுமிடத்தில் தங்கி, விஷ்ணுவை வழிபட்டு வந்தார். பகவானைத் தரிசிக்காமல் காஞ்சிக்குத் திரும்புவதில்லை என்ற வைராக்கியத்துடன் பகவானைத் தரிசிக்கும் வரை பகலில் ஒருமுறை மட்டுமே தன் கையால் அமுது சமைத்து அதை பகவானுக்குப் படைத்த பிறகுதான் சாப்பிட்டார்.

ஒருநாள் அந்தணர் சமைத்து வைத்த உணவு, அவர் நீராடிவிட்டு வருவதற்குள் காணாமல் போய்விட்டது. அதற்காக அவர் கலங்காமல் மறுபடியும் உணவு சமைத்தால் பகவானை வழிபடும் நேரம் குறைந்து விடுமே என்ற நினைப்பில் பட்டினியாகவே இருந்து பகவானை வழிபட்டார். இதேநிலை தினமும் நீடித்தது. ஏழாவது நாள் வழக்கம் போல் அவர் உணவு சமைத்து வைத்துவிட்டு நீராடி வரச் சென்றார்.

நீராடிவிட்டு அவர் திரும்பிவரும்போது அவருடைய குடிசையிலிருந்து ஒரு சண்டாளன் உணவுப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு ஓடுவதைப் பார்த்தார். உடனே ஒரு கிண்ணத்தில் நெய்யை எடுத்துக் கொண்டு அவனிடம் கொடுப்பதற்காக விரைந்து சென்றார். சற்றுத் தூரம் ஓடிய சண்டாளன் மயங்கி விழுந்து விட்டான்.

உடனே அந்தணர் அவனைத் தம் மடியில் கிடத்தில் மயக்கம் தெளிவித்து உணவூட்ட முற்பட்டார். உடனே. சண்டாளன் அங்கு சக்தரதாரியாகத் தோன்றி'அப்பனே! உனக்கான சோதனையில் நீ தேர்ச்சி பெற்றுவிட்டாய்'' என்று கூறியருளியதுடன் தேவர்கள் பூமழை பொழிய விமானத்தில் ஏற்றி வைகுண்டம் அனுப்பினார்.

அந்தணர் ஏறிச் சென்ற விமானம் மன்னனின் யாக சாலையின் மீதாகப் பறந்து செல்வதைப் பார்த்த மன்னன் தெளிவு பெற்றான். ஆண்டவனை அடைய ஆரவார பக்தியால் முடியாது.

ஆத்மார்த்தமான அன்புடன் செலுத்தும் பக்தியாலேயே முடியும் என்று உணர்ந்த மன்னன் யாகத்தை நிறுத்துமாறு கூறி மற்றவர்கள் தடுக்குமுன் கண்ணீர் விட்டு அழுதபடி யாகத்தில் குதித்து உயிர்த் தியாகம் செய்துவிட்டான். உடனே விஷ்ணு பகவான் அவனுக்கும் திருக்காட்சி தந்து அவனையும் தன் திருவடியில் சேர்த்துக் கொண்டார்.

# மாணிக்கக்கல் அகழ்வுக்கு இரத்தினபுரியில் அனுமதி

கொழும்பு, ஏப். 9

இரத்தினபுரியில் தெரிவு செய்யப்பட்ட பகுதியில் மாணிக்கக்கல் அகழ்வுக்கான அனுமதியை வழங்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில், தேல பாலம் தொடக்கம் எர பத்தாவ வரையான பகுதியில் மாணிக்கக்கல் அகழ்வுக்கு அனுமதி வழங்கப்படவுள்ளது என்று இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை தலைவர் திலக் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

புதிய நடைமுறையின் கீழ் 53 துண்டுக் காணிகளில் மாணிக்கக்கல் அகழ்வுக்கு அனுமதி வழங்கப்படவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-இ)

# வெகுவிரைவில் ஆட்சி மாற்றம்

## கூறுகிறார் வடிவேல் சுரேஸ்



கொழும்பு, ஏப். 9

நாட்டில் வெகுவிரைவில் ஆட்சி மாற்றம் ஏற்படும். மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்ள நாம் தயாராகவே உள்ளோம். மீண்டும் ஊவா மாகாணத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றுவோம். மத்திய மாகாணத்திலும் பெரும் வெற்றியை ஈட்டுவோம். இதன் மூலம் பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீளவும் பெற்றுக் கொள்வோம் இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார். கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நல்லாட்சி அரசின் காலத்தில், ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் தனியான தமிழ் கல்வி அமைச்சு காணப்பட்டது. எனினும் தற்போது மத்திய மாகாணத்தில் தனியான தமிழ் கல்வி அமைச்சு நீக்கப்பட்டுள்ளது. இந்தியாவுடன் 13 பிளஸ் பற்றி பேசுபவர்கள் அதற்கு கீழ்மட்ட செயற்பாடுகளையே தற்போது முன்னெடுத்து வருகின்றனர். சிறுபான்மையினருக்கு அதிகார பரவலாக்கத்தை வலியுறுத்தியே 13ஆவது அரசமைப்பு திருத்தம் கொண்டு வரப்பட்டது. எனினும் தற்போது அதிகார பரவலாக்கத்துக்குப் பதிலாக அதிகாரங்கள் பறிக்கப்படுகின்றன. ஆனால் இவை அனைத்தும் குறுகிய கால செயற்பாடுகளாகும்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா நாளாந்த சம்பளத்தை மாத்திரமே தம்மால் வழங்க முடியும். மேலதிக கொடுப்பனவு உள்ளிட்ட ஏனைய சலுகைகள் வழங்கப்பட மாட்டாது என்று கம்பனிகள் தெரிவித்துள்ளன. அவ்வாறு மேலதிக கொடுப்பனவு வழங்கப்படாவிட்டால் கம்பனிகளுக்கு எதிராக நீதிமன்றத்தை நாடுவோம்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினமான மார்ச் 5ஆம் திகதி முதல் நாளாந்த சம்பளம் ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில் நிலுவைக் கொடுப்பனவையும் இணைத்து முழுமையான கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும். கம்பனிகளின் வஞ்சித்தல்களை [illegible] சகல தொழிற்சங்கங்களும் ஒ[illegible] வேண்டும் - என்றார். ([illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழி இறைச்சி விலையேற்றம்; எதிர்ப்புத் தெரிவித்துக் கடையடைப்பு

கொழும்பு, ஏப். 9

கோழி இறைச்சி உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திகளின் விலைகளை அதிகரித்துள்ளதால், கொழும்பு புறக்கோட்டை பஸ்ரியன் மாவத்தையிலுள்ள கோழி இறைச்சி விற்பனையாளர்கள் தற்காலிகமாகக் கடைகளை மூடி எதிர்ப்பை வெளியிட்டனர்.

இது தொடர்பில் கோழி இறைச்சி உற்பத்தியாளர்கள் தெரிவித்ததாவது:

கோழிக்குஞ்சு ஒன்றின் விலை தற்போது 80 ரூபாவில் இருந்து 200 ரூபா வரை செல்கின்றது. தீவனத்தின் விலை 6 ஆயிரத்து 900 ரூபா வரை செல்கின்றது.

இதனால் உற்பத்திக்கான தொகையை அதிகமாக்கினாலேயே எம்மால் சமாளிக்க முடியும் என்றனர்.

இது தொடர்பில் கோழி இறைச்சி விற்பனையாளர்கள் தெரிவித்ததாவது: 650 ரூபாவுக்கு இறைச்சியைக் கொள்வனவு செய்ய முடியாது. இரு நாள்கள் கடைகளை மூடினால் இறைச்சிக்கான கேள்வி குறைந்து விலைகள் குறையும். இப்படியே செல்ல அனுமதித்தால் ஒருகிலோ கோழி இறைச்சி ஆயிரம் ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படும் நிலை ஏற்படும் - என்றனர். (ம-இ)


## நன்றி நவிலல்



### திருமதி. இராஜரூபிணி தம்பு

காலஞ்சென்ற திருமதி. இராஜரூபிணி தம்பு அவர்களின் குடும்பத்தவர்கள் ஆகிய நாம், மிகவும் கரிசனையுடன் அவரை சிகிச்சையளித்த வைத்திய கலாநிதி N.ஜெயகுமாரன், அவர்களுக்கும் மருத்துவ உதவி வேண்டிய வேலையில் உதவிய ஏனைய வைத்தியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இறுதி நன்றி ஆராதனைகள் நடத்திய குருமார்களுக்கும் நாம் கடமைப்பட்டுள்ளோம். இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், மலர்வளையங்கள், இரங்கல் செய்திகள், அனுப்பியவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர் நண்பர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கடவுள் உங்கள் அனைவரையும் ஆசிர்வதிப்பராக!


# சிறுவர்கள் துஷ்பிரயோகம்; பிக்குவுக்கு விளக்கமறியல்

திருகோணமலை, ஏப்.9

திருகோணமலை கந்தளாய் பகுதியில் விகாரைக்குச் சென்ற இரு சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோ கத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பிக்குவை இன்று 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கந்தளாய் அக்ரபோதி விகாரைக்குச் சென்ற 12 மற்றும் 14 வயதுச் சிறுவர்கள் பூசை வழிபாட்டுக்காகச் சென்ற போது பௌத்த பிக்கு ஒருவர் தங்களை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் என தம்பலகாமம் பொலிஸ் நிலையத்தில் அவர் கள் தமது பெற்றோருடன் சென்று மேற்கொண்ட முறைப்பாட்டுக்கமைய குறித்து பிக்கு கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## கடலுக்குச் சென்ற மீனவர்கள் மாயம்

யாழ்ப்பாணம், ஏப்.9

பருத்தித்துறையில் கடலுக்குச் சென்ற மீனவர்கள் மூவர் கரை திரும்பவில்லை. அது தொடர்பில் அவரது குடும்பத்தினர் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

47 வயதுடைய இருவர் மற்றும் 40 வயதுடைய ஒருவரே கரைக்குத் திரும்பவில்லை.

நேற்றுமுன்தினம் இரவு 8 மணிக்கு இவர்கள் கடலுக்குச் சென்றுள்ளனர். வழமையாக மறுநாள் காலை கரை திரும்பும் அவர்கள் நேற்று இரவு வரை திரும்பவில்லை. அதையடுத்து நேற்று இரவு அவர்களின் குடும்பத்தினர் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (எ-26)

## மட்டக்களப்பில் 3 மாதங்களில் 160 பேர் கைது

மட்டக்களப்பு, ஏப். 8

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களில் மாத்திரம் போதைப்பொருள்களை வைத்திருந்த மற்றும் விற்பனை செய்த குற்றச்சாட்டில் 160 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என மதுவரித் திணைக்கள மட்டக்களப்பு மாவட்ட பொறுப்பதிகாரி நிக்சன் அவுஸ்கோன் தெரிவித்தார்.

கசிப்பு உற்பத்தி, சட்டவிரோத மதுபானம், கஞ்சா, கோடா மற்றும் கசிப்பு தயாரிக்கப் பயன்படுத்தும் உபகரணங்கள் என்பவற்றுடன் இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரையான காலப் பகுதியில் இவர்கள் கைதாகியுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் போதைப்பொருள்களை ஒழிக்கும் நடவடிக்கையை மாவட்ட மதுவரித் திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)


## மரண அறிவித்தல்

பிறப்பு
15 . 02 . 1935



இறப்பு
08 . 04 . 2021

### திருமதி சண்முகம் அன்னசோதி

புங்குடுதீவு இறுப்பிட்டி 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ச.அன்னசோதி அவர்கள் நேற்று (08.04.2021) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற முருகேசு சேதுப்பிள்ளை தம்பதிகளின் ஆசைமிகு மருமகளும், காலஞ்சென்ற சண்முகத்தின் பாசமிகு மனைவியும், அருட்பாக்கியம் காலஞ்சென்ற பரராஜசிங்கம் (அருமை), தனவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கனகசபை, அருணாசலம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜெகதீஸ்வரன், ஜெகதாஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், வைதேகி, வானதி ஆகியோரின் அன்பு மாமியாரும், கலையரசி, ரமேஷ்குமார், சதீஸ்குமார், துஷ்யந்தினி, கோபிசாளினி, துவாரகா, வேணு, பிருந்தா, சனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், பாமனா, டினோசன், டிசானா, ஜான்சி, பிரவீன், தஸ்மிகன், சரீனா, தரணிகா, தஷ்வின், தனுஶ்ரீ, சாணுசா, அஸ்வின், ஆருத்திரா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கன்குளம் வீதி,
லை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### ஜெஜராஜன் ஜெயரூபா

110, கலைமகள் வீதி, நல்லூர் வடக்கினைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட ஜெஜராஜன் ஜெயரூபா நேற்று (08.04.2021) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஜெஜராஜன் (தாதி, யாழ். போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மாணிக்கவாசகர் கனகாம்பிகை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், அருச்சுணன் (யாழ். இந்துக் கல்லூரி, க.பொ.த உயர்தரம் 2020 உயிரியல்), சங்கீதன் (யாழ். இந்துக் கல்லூரி, க.பொ.த உயர்தரம் 2021 உயிரியல்), அபர்ணா (யாழ்/ வேம்படி மகளிர் கல்லூரி, 2020 க.பொ.த சாதாரணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயமோகன் (சுவிஸ்), ஜெயந்தன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2021) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 892 9406
077 895 5378

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரூ.136 மில்லியன் வைப்பு; இளைஞர் ஒருவர் கைது

கொழும்பு, ஏப்.9

136 மில்லியன் ரூபாவுக்கு அதிகமான பணத்தை வைப்பிலிட்டிருந்த வங்கிக் கணக்கின் உரிமையாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பணம் நாட்டில் பல்வேறு குற்றச் செயற்பாடுகளை செய்துவிட்டு . தற்போது வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றுள்ள தர்மசிறி பெரேரா என்ற சந்தேக நபருக்கு சொந்தமானது என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித்ரோஹண தெரிவித்தார். மொறட்டுவ இரத்மலானை பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். (வ-இ)

# விலைக்கேள்விக்கான கோரல்(2021/01)
# சமூகசேவைகள் திணைக்களம், வடமாகாணம்

1. சமூகசேவைகள் திணைக்களம், வடமாகாணம், திணைக்கள பெறுகைக்குழுவின் தவிசாளர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக் கேள்வியாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக்கேள்வியாளர்கள், நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (**CIDA**) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளது
5. அக்கறைகொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள்,கீழே **6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில்** மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், அம் முகவரியில் மு.ப **9.00** மணியிலிருந்து பி.ப **4.00** மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **சமூகசேவைகள் திணைக்களம், வடக்கு மாகாணம், முதியோர் இல்ல வளாகம், கண்டி வீதி, கைதடி, (தொலைபேசி இல: 021-320 2464, தொலைநகல் 021-223 1725) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை கீழே அட்டவணையில் காட்டப்பட்ட காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரையில் சமர்ப்பித்து** கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம், பிரதி) கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திகதியில் **மு.ப 10.30** மணிக்கு அல்லது **அதற்கு முன்னர் தவிசாளர், திணைக்கள பெறுகைக்குழு, சமூகசேவைகள் திணைக்களம், வடக்கு மாகாணம், முதியோர் இல்ல வளாகம், கண்டி வீதி, கைதடி, எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்.** காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்வி தொடர்பான முதற் கூட்டம், **சமூகசேவைகள் திணைக்களம், வடக்கு மாகாணம், முதியோர் இல்ல வளாகம், கண்டி வீதி, கைதடி,** என்னும் முகவரியில் **பி.ப 03.30** மணிக்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திகதியில் நடைபெறும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| கேள்வி ஆவணம் வழங்கும்/பெற்றுக்கொள்ளும் காலம் | **09.04.2021 முதல் 22.04.2021 வரை** |
| கேள்வி தொடர்பான முதற் கூட்டம் | **15.04.2021 அன்று பி.ப 03.30** |
| கேள்வி மூடுதல்/திறத்தல் | **23.04.2021 அன்று மு.ப 10.30** |

| கேள்வி அடையாள இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | மீளளிக்கப் படாத தொகை | கேள்விப் பிணை விபரம். | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தொகை | தேவைப்படும் காலம். |
| NP/B/JA/17(2021) | மருதங்கேணியில் சமூக பராமரிப்பு நிலையம் நிர்மாணித்தல் | 04.63 | 105 நாட்கள் | C8 or C7 (கட்டடங்கள்) | 3,500.00 | 47,000.00 | 22.07.2021 வரை |
| NP/B/JA/18(2021) | கைதடி முதியோர் இல்லம் புனரமைத்தல்- தொகுதி-01 | 07.90 | 126 நாட்கள் | C7 or C6 (கட்டடங்கள்) | 3,500.00 | 79,000.00 | 05.08.2021 வரை |
| NP/B/JA/19(2021) | கைதடி முதியோர் இல்லம் புனரமைத்தல்- தொகுதி-02 | 04.84 | 105 நாட்கள் | C8 or C7 (கட்டடங்கள்) | 3,500.00 | 49,000.00 | 22.07.2021 வரை |

**"விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இக் கொள்வனவின் மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத்தொகை (VAT மற்றும் வேறு வரிகள்) 50மில்லியனினுள் இருப்பதனால், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பொது நிதிச் சுற்றறிக்கை இல 04/2016(iii) இல் குறிப்பிடப்பட்டவாறு பின்பற்றப்படும்". அத்துடன் இக்கேள்வியின் போது 09.10.2020 மற்றும் 11.01.2021 ஆம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை இல முறையே 03/2020 மற்றும் 03/2020(i) என்பனவும் பின்பற்றப்படும்."**

தவிசாளர்
மாகாண திணைக்களப் பெறுகைக்குழு
சமூகசேவைகள் திணைக்களம்
வடமாகாணம்

## வெளிநாடு செல்ல முற்பட்ட 20 பேர் சிலாபத்தில் கைது

கொழும்பு, ஏப். 9

சட்டவிரோதமாகக் கடல் கடந்து வெளிநாடுகளுக்குச் செல்லமுற்பட்ட 20 பேர் சிலாபத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

சிலாபம் கோண்டாச்சிகுடா பகுதியில் சந்தேகத்துக்கு இடமான வகையில் பயணித்த நான்கு முச்சக்கர வண்டிகளைச் சோதனையிட்டபோதே மேற்படி 20 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட நபர்களில் 16 வயதுச் சிறுவன் உட்பட 15 ஆண்களும், 13 வயதுச் சிறுமி உட்பட ஐந்து பெண்களும் அடங்குவர். சந்தேகநபர்கள் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், வத்தளை, புத்தளம் மற்றும் வாழைச்சேனை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம,இ)

## வறட்சியான காலநிலை; தண்ணீருக்கு தட்டுப்பாடு

கொழும்பு, ஏப். 9

கடும் வறட்சியான காலநிலை காரணமாக தண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள செய்திக் குறிப்பில், கடும் வறட்சியான காலநிலை காரணமாக தண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. புத்தாண்டுக் காலத்தில் தண்ணீருக்கான தேவை அதிகம் உள்ளதால், இன்னும் தட்டுப்பாடுகள் அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது. இதனால், தண்ணீரைச் சிக்கனப்படுத்திப் பயன்படுத்துமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம,இ)

**புதிய அரசியலமைப்பில்**
**சைவ சமயத்துக்கு முன்னுரிமை கொடுக்க**
**மதமாற்றத் தடையை உள்ளடக்குக**
**மாடுகளை வெட்டத் தடையை உள்ளடக்குக**



සෛවාගමට ප්‍රමුඛතාවක් දෙන්න.
ආගම් වෙනස් කිරීම තහනම් කරන්න.
ගව ඝාතයට එරෙහිව තහනම් නියෝගයක් පනවන්න.



**தவத்திரு விபுலானந்த அடிகளார்**

129ஆவது பிறந்த நாள், பங்குனி பூரட்டாதி (10.04.2021)
இலங்கையின் 12 மாவட்டங்களில் 16 திருக்கோயில்களில் தவமிருக்கிறோம் – உண்ணா நோன்பு நோற்கிறோம் – வழிபடுகிறோம் மூன்று கோரிக்கைகளை முன் வைக்கிறோம். ஆதரிப்பீர்.

**மறவன்புலவு க. சச்சிதானந்தன் +94 772 754 864**

# கண்ணீர்க் காணிக்கை



மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் செயலாளரும் பொதுச்சேவை ஆணைக்குழுவின் அங்கத்தவரும் ஆன

## உயர்திரு. வேலாயுதன் சிவஞானசோதி

இலங்கை நிர்வாக சேவையின் சிரேஸ்ட அதிகாரியான இவர் யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் பௌதீகவள அபிவிருத்திக்கும் பாடசாலையின் கல்வி மேம்பாட்டிற்கும் ஆற்றிய அளப்பரிய பணிகளை நினைவு கூர்வதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்
**யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# மாராட்டி வாழ்த்துகின்றோம்

## திருமதி தமிழ்ப்பிரியா சுதன்

B. Sc (Hons) M.Sc PGDE Dip.in Edu, LLB Attorney At Law சட்டத்தரணி



இலங்கை உயர் நீதிமன்றில் பிரதம நீதியரசர் முன்னிலையில் 31.03.2021 இல் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்ற சாதனையாளர் மேலும் பல சிறப்புக்கள் பெற்று சேவை பல நல்கி பல்லாண்டு சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்க வளமுடன்

வாழ்த்துவோர்:

அப்பா, அம்மா, அக்கா, அத்தான், பிள்ளைகள்

திரு.திருமதி P.பாலச்சந்திரன் குடும்பம்
திரு.திருமதி S. சிவநேசன் குடும்பம்

கச்சாய் வீதி, கொடிகாமம்.

---

# இந்துக் கற்கைகள் பீடம்

## இந்துக்கற்கைகள் பீடத்தின் முன்மொழியப்பட்ட கட்டடத்திற்கான முகப்பு வடிவமைப்பின் வரைவு தொடர்பான மாதிரி உருவுக்கான விண்ணப்பம்

இலங்கைவாழ் இந்து சமூகத்தின் பண்பாட்டு நிலைக்களனாகவும் புலமைத்துவ மையமாகவும் தகவமைந்து மிளிரும் பொருட்டாய் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்துக்கற்கைகள் பீடம் நிறுவப்பட்டது. சேர்.பொன்.இராமநாதனின் அபிலாசைகளைக் கருத்தில் நிறைத்துக் காலந்தோறும் வழிகாட்டிய 'ஆன்றவிந்த கொள்கைச் சான்றோர்களின் ஆலோசனைகளால் ஆற்றுப்படுத்தப்பட்டு செழுங்கலை நியமமாகும்' முனைப்போடு எமது பீடம் இன்று எழுந்து நிற்கின்றது.

இருப்பு என்பது வெறுமனே கருத்தியற்றளத்தில் மட்டும் அமையும் ஆயின் அது கனவாகவே கருதப்படும். செயல் முனைப்பும் நிறுவனமயமாக்கலும் திட்டமிடுதலும் பொருள்சார் பரிமாணங்களுடன் இயைபுற்றவை. அந்த வகையில் எமது பீடத்தின் இருப்புக்கான கட்டுமானத் தொகுதிகளை உருவாக்கவேண்டியது காலத்தின் கட்டா யமாக உள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புதிதாக அமையவிருக்கும் இந்துக்கற்கைகள் பீட 'கட்டடத்திற்கான முகப்பு மாதிரித் தோற்றம்' குறித்த வரைபு சமூக ஆர்வலர்கள் மற்றும் மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. கீழே 'சூ தொடர்பான விடயங்கள்' என்ற பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றைக் கருத்திற் கொண்டு முகப்புத் தோற்றத்தினை வரைந்து பீடாதிபதி, இந்துக்கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (021-221-2396) எனும் முகவரிக்கு 05.05.2021 இற்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றேன்.

தெரிவுசெய்யப்படும் முகப்பு மாதிரித் தோற்றத்தினை சமர்ப்பித்தவருக்கு பல்கலைக்கழக கௌரவிப்பும் பணப்பரிசிலும் வழுங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களுக்கு www.jfn.ac.lk

சூ தொடர்பான விடயங்கள்

1. முகப்புத் தோற்றம் அமையவுள்ள இடத்தின் பரப்பளவு
   நீளம்: 50 அடி அகலம்: 30அடி
2. நீளப்பகுதி முன் பகுதியாகக் கருதப்படும்.
3. மொத்தமாக நான்கு மாடிகளைக் கொண்ட கட்டடத்திற்கான முகப்புத் தோற்றம் எதிர்பார்க்கப்படுகிறது.
4. யாழ்ப்பாணத் தமிழ்க் கலாசாரத்தினையும் இந்துக்களின் கட்டடக் கலை மரபுகளையும் முன்னிலைப்படுத்தி முகப்பு அமைக்கப்பட வேண்டும்
5. தங்களினால் சமர்ப்பிக்கப்படும் முகப்புத் தோற்றத்தின் வடிவமைப்புக்களின் மாதிரிகளுக்கான விளக்கங்களும் தெளிவான முறையில் வழங்கப்பட வேண்டும்.
6. ஒருவர் எத்தனை முகப்பு மாதிரிகளையும் அனுப்பி வைக்க முடியும்.
7. அனைத்து மாதிரிகளும் A3 (29.7cm x 42cm) அளவு தாளில் வரையப்பட்டிருத்தல் வேண்டும்.

பீடாதிபதி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

---

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

# புத்தாண்டு மலிவு விற்பனை



அசாதாரண சூழ்நிலையால் தற்காலிகமாக நடைபெறாமலிருந்தது. எனவே வாடிக்கையாளர்களின் நலன்கருதி மீண்டும் 09.04.2021 முதல் 20.04.2021 வரை அரச சட்டதிட்டங்களுக்கு அமைவாகவும், சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாகவும் இந்தியன் செலக்ஷனின் **புத்தாண்டு மலிவு விற்பனை** நடைபெறும் என்பதை மகிழ்ச்சியோடு வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்து கொள்கின்றோம்.

கொட்டன் Top, டெனிம் Top, மொடன் Top, சல்வார்கள், சல்வார் துணிகள், பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், சேட், T –சேட், ரவுசர் வகைகள், பார்ட்டி புரொக்ஸ் என இன்னும் ஏராளமான ஆடைத் தெரிவுகள்.

அனைத்து வாடிக்கையாளர்களும் சுகாதார நடைமுறைகளை பேணவேண்டும்.

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்


**இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்**
**காலம்: 09.04.2021 - 20.04.2021 வரை**

---

எங்கள் தாயுமானவரின்

# 31ஆம் நாள் நினைவு நாள்

மண்ணினில் மலர்வு
07 - 06 - 1943



மண்ணை விட்டு உதிர்வு
10 - 03 - 2021

## அமரர் நாகநாதர் சிவஞானம்

திதி : துவாதசி

பங்குனி பத்தினில் எமைவிட்டு
பறந்தோடிச் சென்றதேனோ
காலமது விரைந்தே கரைந்தோடியது
மாதமோ ஒன்றாகி விட்டது.
ஆனாலும்...
எம் அன்புத் தெய்வமே!
ஆருயிர் தந்தையே!
பாசமதை கொள்ளை கொண்ட
பாசமலரே அப்பா!!!
உங்கள் பாசமதைத் தேடுகின்றோம். பாரினிலே
ஓடுகின்றோம் உங்கள் குரலைக் கேட்கவே
வாடித்தான் நிற்கின்றோம்
வாழ்வினிலே - தேடித்தேடி
உந்தன் அன்பைப் போல
அள்ளித்தர அவனியிலே
யார் தான் உளர் அப்பா
வாரீர் வாரீர் என அழைத்தாலும்
மீண்டும் வராத இடம் தானே சென்றீர்களோ அப்பா!
வானிலிருந்து எமை வாழ்த்தும்
எங்கள் தாயுமானவரே உங்கள்
ஆத்மா சாந்தியடைய இறைஞ்சுகின்றோம்

ஓம் சாந்தி ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!

இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
077 601 6310

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பி.சி.ஆர். செய்யாத ...

யாழ்ப்பாணம் நகரப் பகுதி வர்த்தகர்கள், பணியாளர்களில் இரண்டாம் கட்ட பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்திக் கொண்டவர்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட நேற்று அனுமதி வழங்கப்பட்டது. நேற்று வர்த்தக நிலையங்கள் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் திறக்கப்பட்ட நிலையில், இரண்டாம் கட்ட பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொள்ளாதவர்கள் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படவில்லை. அவ்வாறு சுமார் 200 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இரண்டாம் கட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளாதவர்கள் இன்று, துரையப்பா விளையாட்டரங்கில் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இன்று யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளும் நடவடிக்கை நிறைவுக்கு வரும் என்றும், வரும் நாள்களில் திருநெல்வேலி சந்தைப் பகுதி மற்றும் அந்தப் பகுதி வர்த்தகர்கள் ஆகியோருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார். அவற்றின் முடிவுகளைக் கொண்டே அந்தப் பகுதி முடக்கம் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (எ-26)

## நேற்று மட்டும் ....

அவற்றின் முடிவுகள் நேற்றுக்காலை வெளிவந்த நிலையில் 129 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டது. அவர்களில் 20 பேர் யாழ்ப்பாணம் நகரப் பகுதி வர்த்தகர்கள். 88 பேர் திருநெல்வேலி பாற்பண்ணைக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். 21 பேர் நகர வர்த்தகர்களுடன் நேரடித் தொடர்பில் இருந்தவர்கள்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடம் என்பவற்றில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 8 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் சிறைச்சாலை யில் மூவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டிருந்த நால்வருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கிளிநொச்சி மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் கொரோனாத் தொற்று அறிகுறிகளுடன் வந்த ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ-26)

## கொவிட் தொற்றால்....

சிகிச்சை பெற்றுவந்த இவருக்கு கொரோனாத் தொற்றும் ஏற்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தில் இதுவரை கொரோனாத் தொற்றால் 8 பேர் உயிரிழந்துள்ளனர். (எ)

## டென்மார்க்....

பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை மற்றும் நோயெதிர்ப்பு மற்றும் உயிரியல் நிறுவனத்தின் இயக்குநர் மருத்துவர் சந்திம ஜீவந்தர இதனைத் தெரிவித்தார். டென்மார்க் மற்றும் ஈராக்கில் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள பி.1.428 வகை வைரஸ் தொற்றுடனே மூவர் இனங்காணப்பட்டுள்ளனர். அதேவேளை தென்னாபிரிக்காவில் இனங்காணப்பட்ட திரிபடைந்த வைரஸ் தொற்றுடனும் இருவர் கொழும்பில் இனங்காணப்பட்டுள்ளனர். (எ-இ)

## யாழ்ப்பாண நகர...

ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய ஐக்கிய மக்கள் சக்தியின் அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிங்ஸ் நெல்சன், "ஒரே நாடு, ஒரே சட்டமெனில் இந்நாட்டில் ஒரு காவல்துறை பிரிவுதான் இருக்கவேண்டும். எனினும், யாழ்ப்பாணம் மாநகர முதல்வரால் தனியான பாதுகாப்புக் குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரில் பொலிஸாரால் முன்னெடுக்க வேண்டிய பணிகளை நேற்றுமுன் தினம் அந்தக்குழுதான் செய்தது. போக்குவரத்து நெறிப்படுத்தலும் முதல்வரின் பாதுகாப்புக் குழுவின் கீழ் தான் இடம்பெறுகின்றது. கடந்த காலங்களில் புலிகளின் காவல்துறை பிரிவு அணிந்திருந்த சீருடைக்கு நிகரான ஆடையையே இந்தக் குழுவும் அணிந்துள்ளது.

இது தொடர்பில் அரசுக்கு தெரியுமா?, இது பாரதூரமான பிரச்சினையாகும். எனவே, இது தொடர்பில் அரசு தேடிப் பார்க்க வேண்டும் என்றார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் சமல் ராஜபக்ச

"இன்று (நேற்று) மாலை பாதுகாப்பு ஆலோசனைக்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. அனைத்து அதிகாரிகளும் வருவார்கள். அங்குவந்து தகவல்களை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்." - என்றார். அதன்பின்னர் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், ஈ.பி.டி.பியின் ஆதரவுடன் வந்த முதல்வரே அவ்வாறு செய்துள்ளார் எனச் சுட்டிக் காட்டினார். (ற-44)

## அரசியல் கைதியின்....

றுத்தல் விடுக்கப்படுகின்றது என்று அரசியல் கைதி ஒருவரின் தாய் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கோண்டாவில் கிழக்கில் வசிக்கும் தே. தேவராணி என்பவரே பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

தமிழ் அரசியல் கைதி ஒருவரின் தாயான இவர், அரசியல் கைதிகளின் விடுதலைக்கான அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று அவர்களின் விடுதலையை வலியுறுத்தி வருகின்றார். கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாக நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றிலும் அவர் பங்கேற்றிருந்தார்.

அன்றைய தினம் இரவு அவரது தொலைபேசிக்கு அழைப்பெடுத்த இனந்தெரியாத ஒருவர் அவரைத் தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார். அதன்பின்னர் வெவ்வேறு இலக்கங்களில் இருந்து வரும் தொலைபேசி அழைப்புக்களிலும் அவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் நேற்று அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

இவ்வாறு அரசியல் கைதிகளின் குடும்பங்கள் பலவற்றுக்கும் அச்சுற்றுத்தல் விடுக்கப்படுகின்றன. அவர்கள் அதை வெளியே சொல்லப் பயப்படுகிறார்கள். தங்களின் உறவுகளின் விடுதலைக்காக ஜனநாயக ரீதியில் போராடும் அவர்களை அச்சுறுத்துவது வருத்தமளிக்கின்றது என்று அரசியல் கைதிகளின் விடுதலைக்காகப் போராடும் குரல் அற்றவர்களின் குரல் அமைப்பு தெரிவித்துள்ளது. (எ-26)

## பனையில் இருந்து...

நிமித்தம் பனையில் ஏறியவர் தவறிக் கீழே விழுந்துள்ளார். அவர் உடனடியாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். (எ-இ)

## தேசிய பாதுகாப்பு...

தூய்மைப்படுத்தும் வகையில் மாநகர சபையால் நியமிக்கப்பட்டுள்ள காவல் படை தொடர்பிலும், அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சீருடை தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை தொடர்பாகவும் விசேடமாக ஆராயப்பட்டது.

அதில் தேசிய பாதுகாப்புக் கருதி சில முடிவுகள் எடுக்கப்பட்டன எனவும், அவை விரைவில் வெளியாகும் எனவும் கூட்டத்தில் கலந்துகொண்ட முக்கிய பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். மாநகர சபையால் மாநகரின் சுகாதார நடைமுறைகளைக் கண்காணித்தல், கழிவகற்றல் பொறிமுறையைக் கண்காணித்தல் மற்றும் மாநகரின் ஒழுங்கு உள்ளிட்டவற்றை கண்காணிப்பதற்காக உருவாக்கப்பட்ட காவல் படையின் சீரூடை விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அதையடுத்து நேற்றுப் பிற்பகல் அவசரமாகக் கூடிய தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் யாழ். மாநகர சபை விவகாரம் தொடர்பில் விசேடமாக ஆராயப்பட்டுள்ளது. (எ-22)

## ஒரு சிலரின்....

இருக்கக்கூடாது.

இவ்வாறு கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி என்று நௌபர் மௌலவியின் பெயரை அரசு அறிவித்துள்ளமை தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஈஸ்டர் தாக்குதல் இலங்கைக்கு மட்டுமல்ல சர்வதேசத்துக்கும் சவால் விடுப்பதாக அமைந்திருந்தது. கொழும்பிலுள்ள நட்டசத்திர விடுதிகளில் தங்கியிருந்த வெளிநாட்டு பிரஜைகள்கூட ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்திருந்தனர். இது அனைவருக்கும் தெரிந்த விடயம். இந்த நிலையில் குற்றவாளிகளைத் தண்டிக்காவிட்டால் சர்வதேச நீதிமன்றத்தை நாடுவோம் என்று அரசின் கவனத்துக்கு கொண்டுவந்திருந்தேன். அரசுக்கு காலஅவகாசத்தையும் வழங்கியிருக்கின்றேன்.

இதையடுத்து ஒரு சிலரின் பெயர்களை பிரதான குற்றவாளிகள் என்று அரசு அறிவித்துள்ளது. இது எமது வாயை அடைக்கும் முயற்சியாக இருக்கக்கூடாது. ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய உண்மையான, நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்புடைய குற்றவாளிகள் அனைவருக்கும் எதிராக தகுதி தராதரம் பாராது உடன் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எவரையும் அரசு தப்பவிடக்கூடாது.

அரசும் எதிரணியும், இந்தத் தாக்குதலை தத்தமது அரசியல் பரப்புரைகளுக்கும் எதிர்வரும் தேர்தல் பரப்புரைக்கும் தற்போது பயன்படுத்துவதை உடன் நிறுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க அரசும், எதிரணியும் ஓரணியில் செயற்படவேண்டும் என்றார். (ஒ,5,22)

## கொழும்பு மாநகர...

றும், உயர் அதிகாரிகளுடன் ஆராய்ந்துவிட்டு சில தினங்களில் பதிலளிக்கின்றோம் என்றும் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு யாழ்ப்பாண மாநகர சபையின் மேயர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையால் அமைக்கப்பட்ட காவல் படையின் செயற்பாடுகள் நேற்று ஆரம்பிக்கப்பட இருந்தன. நேற்றுமுன்தினம் பரீட்சார்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அந்தக் காவல் படைக்கு வழங்கப்பட்ட சீருடை, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் காவல்துறையினர் பயன்படுத்தியதை ஒத்ததாக இருந்ததாகத் தெரிவித்து யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

பின்னர், வடமாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய காவல் படையின் கடமைகளை இடைநிறுத்த வேண்டும் என்று யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் மாநகர ஆணையாளருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கு அமைவாக இக் காவல் படையின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், காவல் படையினரின் சீருடைகளும் பொலிஸாரிடம் விசாரணைக்காக வழங்கப்பட்டுள்ளன. (ஒ-26)

## துணி இறக்குமதிக்கும்...

மன்றம் அனுமதி வழங்கியுள்ளது. இந்த நிலையில் அனைத்து வகையான துணிகள் மற்றும் அச்சிடப்பட்ட பற்றிக் துணிகள் என்பவற்றை இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

## முக்கிய அரசியல்வாதிகள் நேற்று கலந்துரையாடல்

கொழும்பு, ஏப். 9

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உட்பட அரசில் அங்கம் வகிக்கும் முக்கிய அரசியல்வாதிகள் இணைந்து முக்கிய கலந்துரையாடலை மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த முக்கிய அரசியல்வாதிகள் குறித்த கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்தனர். அத்துடன் அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர் விமல் வீரவன்ச, அமைச்சர் உதய கம்மன்பில மற்றும் டியூ குணசேகர ஆகியோர் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

தற்போதைய அரசியல் நிலைவரம் மற்றும் மே தினம் தொடர்பில் இதன்போது பேசப்பட்டது என்று அதில் கலந்துகொண்ட அமைச்சர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் 11 கட்சிகளைச் சேர்ந்த 11 தலைவர்களும் கலந்துகொண்டனர் என்று அமைச்சர் உதய கம்மன் பில குறிப்பிட்டார்.

மாகாண சபை சட்ட வரைபு தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட பல கட்சிகள் இணைந்து கலந்துரையாடியிருந்தன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற அடிப்படையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது என்று நிமால் சிறிபால டிசில்வா தெரிவித்தார். (கு-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாப் பெருந்தொற்று வடகொரியாவில் கிடையாது!

## உலக சுகாதார அமைப்புக்கு அறிவிப்பு



**பியாங்யாங், ஏப்ரல் 9**

**கொரோனாப் பெருந்தொற்று இல்லாத நாடாக நாம் உருவாகியுள்ளோம் என்று வடகொரியா அறிவித்துள்ளது. உலக சுகாதார நிறுவனத்துக்கு இந்த அறிவிப்பை வட கொரியா விடுத்துள்ளது.**

உலக நாடுகளிடம் இருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ள கிழக்கு ஆசிய நாடான வட கொரியா, கொரோனா வைரஸ் பரவ தொடங்கியது முதலே தங்கள் நாட்டில் ஒருவருக்குக்கூட வைரஸ் தொற்று இல்லை எனக் கூறி வருகிறது. ஆனால் மோசமான சுகாதார கட்டமைப்பைக் கொண்ட வட கொரியாவில் வைரஸ் பாதிப்பு இல்லை என கூறப்படுவது நம்ப முடியாத ஒன்று என சர்வதேச நிபுணர்கள் கூறுகின்றனர். எனினும் கடுமையான கட்டுப்பாடுகள் மூலம் வைரஸ் பரவலை தடுத்தோம் என்று வடகொரியா கூறுகிறது.

இந்த நிலையில் இப்போது வரை தங்கள் நாட்டில் கொரோனா வைரஸ் இல்லை என வடகொரியா உலக சுகாதார அமைப்பிடம் அறிக்கை ஒன்றை தாக்கல் செய்துள்ளது.

இதுகுறித்து உலக சுகாதார அமைப்பின் வடகொரியாவுக்கான பிரதிநிதி எட்வின் சால்வடார் தெரிவித்ததாவது: 'கடந்த ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி வடகொரியாவில் 23 ஆயிரத்து 121 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. இதன் முடிவில் யாருக்கும் வைரஸ் தொற்று இல்லை என்பது உறுதியானது. கடந்த மார்ச் மாதம் முதல் ஏப்ரல் முதலாம் திகதி வரை 732 பேருக்கு பரிசோதனை செய்யப்பட்டது. ஆனால், அதன் முடிவுகளை உலக சுகாதார அமைப்பிடம் வடகொரியா வழங்க மறுக்கிறது. எத்தனை பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள், அறிகுறிகளுடன் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதைக் கூற வடகொரியஅரசு மறுக்கிறது' என்றார். (ம)

# ஒலிம்பிக் தொடரில் பங்கேற்கமாட்டோம்

## வடகொரியா அதிரடி

பியாங்யாங், ஏப். 9

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில், இன்னும் சில வாரங்களில் ஆரம்பமாகவுள்ள ஒலிம்பிக் தொடரில் பங்கேற்கப்போவதில்லை என்று வடகொரியா அறிவித்தது. டோக்கியோவில் கடந்த வருடம் இந்த ஒலிம்பிக் தொடர் நடைபெறுவதாக இருந்தது. எனினும் கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக தொடர் ஓராண்டுக்குப் பிற்போடப்பட்டு இந்த ஆண்டு நடத்தப்படுகின்றது.

ஜூலை 23ஆம் திகதி தொடர் ஆரம்பிக்கவுள்ளது. இந்த நிலையில் இந்த அதிரடி அறிவிப்பை வடகொரியா விடுத்துள்ளது.

கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாகவே தொடரில் இருந்து விலகுகின்றோம் என்றும் வடகொரியா தெரிவித்துள்ளது. 1988ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடகொரியா ஒலிம்பிக் தொடரைப் புறக்கணிக்கின்றமை இதுவே முதல் தடவை. (ம)

விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி
இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774
A/L 2021 & Day தொழினுட்பப் பிரிவு
உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்
விசேட வினாத்தாள் வகுப்புக்கள்
ஆரம்பம் 2021.04.09
புதிய மாணவர்களும் இணைந்து கொள்ளலாம்.
தனிப்பாட அனுமதிகள் வழங்கப்படும்.
077 248 7774 , 021 221 7860, 076 552 9093

கணிதம் Gr 6 to O/L
கிளிநொச்சி. பரந்தன். விசுமடு பகுதிகளில் தரம் 6 முதல் 11 வரை கணிதம் குழு மற்றும் தனி வகுப்புக்கள்
தொடர்பு 077 064 1094

# நான்கு வாரத்துக்குள் பலத்தை நிரூபிக்குக!

## நேதன்யாகுவுக்கு ஜனாதிபதி அழைப்பு

டெல்அவிவ், ஏப். 9

இஸ்ரேலில் நடந்த பொதுத்தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், அடுத்த நான்கு வாரங்களில் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்குமாறும், அல்லாவிடில் மீண்டும் தேர்தலுக்குச் செல்லும் நிலை ஏற்படும் என்றும் பிரதமர் நேதன்யாகுவுக்கு ஜனாதிபதி ருவன் ரிவ்லின் அழைப்பு விடுத்தார்.

இஸ்ரேலில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மூன்று தடவைகள் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டுவிட்டது. ஆயினும் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. அவ்வாறு பெரும்பான்மை கிடைக்காத பட்சத்தில் தேர்தல் மீண்டும் நடத்தப்படும் என்பது இஸ்ரேலின் விதி. இந்த நிலையிலேயே அடுத்த நான்கு வாரங்களுக்குள் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்குமாறும், அல்லாவிடில் அடுத்த தேர்தலுக்குச் செல்லும் நிலை ஏற்படும் என்றும் ஜனாதிபதி ருவன் ரிவ்லின் தெரிவித்தார். (ம)

# 82 தலிபன்கள் ஆப்கனில் கொலை



காபுல், ஏப். 9

ஆப்கானிஸ்தானில் தலிபன்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையில் 82 தலிபன்கள் கொல்லப்பட்டனர்.


இது குறித்து ஆப்கானிஸ்தான் பாதுகாப்புத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளதாவது:

'ஆப்கானிஸ்தானில் அர்கன் [illegible]மாவட்டத்தில் தீவிரவாதிகளுக்கு [illegible]க ஆப்கானிஸ்தான் படைகள் [illegible]ணுவ நடவடிக்கையை முன்னெ[illegible]துள்ளன.

அப்போது ஏற்பட்ட சண்டையில் 82 தலிபன்கள் கொல்லப்பட்டனர்.

தலிபன்களின் முக்கிய தளபதி சர்ஹாதியும் இதில் கொல்லப்பட்டார் என்றுள்ளது. (ம)

# மரண அறிவித்தல்



## சபாரட்ணம் ரவீந்திரலால்

### (குஞ்சுக் கண்ணா)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கேணியடி வீதி திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரட்ணம் ரவீந்திரலால் (குஞ்சுக்கண்ணா) நேற்று (08.04.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் - மங்கையர்கரசி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரட்ணசபாபதி - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நித்தியானந்தகணேசன், லட்சுமணலால் மற்றும் திருஞானசெந்திலால், காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரலால், சுந்தலிங்கம் மற்றும் குபேரலால், ஜெயலட்சுமி, அம்பலவாணர் பங்கயற்செல்வி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற நகுலேஸ்வரி மற்றும் இந்திராணி, யோகராணி, அன்னலட்சுமி, பத்மினி, பாலினி, ஜெயப்பிரமலோஜன், மாலதி, ஸ்ரீதரன் ஆகியோரின் மைத்துன ரும், லலிதாதேவி, ஆயிலியம், சிவகுமார், புவனேஸ்வரி, பரமேஸ்வரி, உதயகுமார், சிவாஜினி, சிவசுப்பிரமணியம், சந்திரகுமார், றஞ்சினி, குலோத்துங்கன், காலஞ்சென்ற மார்க்ரவீந்திரன் மற்றும் இந்துமதி, றமேஸ் ஆகியோரின் பாசமிகு சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கேணியடி திருநெல்வேலியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி லேன், ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
மனைவி - மகேஸ்வரி (மகேஸ்)
077 645 0803

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இ[illegible] திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி[illegible]த்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.